# வலை

சிங்களச் சிறுகதைகள்



மடுளுகிரியே விஜேரத்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலை

சிங்களச் சிறுகதைகள்

SOUTH ASIAN BOOKS
S. 44, 3rd FLOOR,
C. C. S. M. COMPLEX
COLOMBO 11.
SRI LANKA

470307

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் எழுதிய நூல்கள்

* பொல்வினா வியக்னெ(த்) த
  (நெல்லல்ல பதர்) (சிறுகதைகள்)

* கெம்பிமக் சொயா
  (கானலைத் தேடி) (சிறுகதைகள்)

* அந்துர எய் அராம (ட்) ட
  (ஆலயத்துள் வரும் இருள்)
  (சிறுகதைகள்)

* சுவாமி விபுலானந்தர்
  (சிங்கள மொழிபெயர்ப்பு)

* காலல் . கே. டாலியல்
  (சிங்கள மொழிபெயர்ப்பு) அச்சில்

* திம்பிரி கெய
  (பிறந்தகம்)
  (சிறுகதைகள்) அச்சில்

UNIVERSITY ... 17-2-...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலை

## சிங்களச் சிறுகதைகள்

மடுளுகிரியே விஜேரத்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையின் சலுகையுடன் அச்சிடப்பட்டுள்ளது. இதில் உள்ளடங்கியுள்ள பொருள் சபையின் கருத்துக்களை பிரதிபலிக்க மாட்டாது என்பதனை கவனத்திற் கொள்ளவும்

*வலை (சிங்களச் சிறுகதைகள்)*

*முதற்பதிப்பு அக்டோபர், 1994*

© *மடுளுகிரியே விஜேரத்ன*

*அட்டைப்படம் –*

*ஜகத் ஹேவாபன்ன*

*அச்சிட்டோர் –*

*லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்*

*திலக பிரஸ்*

257 டாம் வீதி, கொழும்பு

Valai (Sinhala Short Stories)
First Edition October, 1994

©Madulugiriya Wijerathne

cover Design by
Jagath Hewapanne

printed by
Lanka Publishing House
Tilaka Press
257, Dam Street, Colombo.

**ISBN 955 – 95389 – 2 – 6**

UNIV

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

*என்னைப் புஷ்பித்த*

*கிராமத்துப் பசுமையோடு*

*விழிகள் உறவாடிக்கொண்டிருந்த வேளை*

*என் அகக்கண்ணையும் திறந்து வைத்து*

*அறிவுப்பாதையைக் காட்டித்தந்த ஆசான்,*

*எழுத்துலகத்திற்கு வழிகாட்டிய அறிவு ஜீவி*

***திரு. அ. சிவரத்தினம்** அவர்களுக்கும்*

*ஒப்பில்லா உத்தியோக வாழ்வில்*

*உறங்கிக் கொண்டிருந்த கற்பனைவளம்*

*விழித்தெழ வழியின்றித் தேய்ந்த போது*

*தகுதி அறிந்து, தலைநகர் அனுப்பி*

*கல்வித்துறையிலும் கால் பதிக்க வழிவகுத்த*

***திரு. கு. துரைராஜா** அவர்களுக்கும்*

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமும், வேகமும் அணைதாண்டும் இளவயதில்

இலக்கியமும் கடமையும் எங்கே தவறிவிடுமோ

என அஞ்சிய வேளை

அமைதி அன்பு என்ற தன் இருவிழிகளாலும்

என் பாதையை நேரமைத்து உயர்வுக்காய் ஊக்குவித்த

திரு. பி. ஜே. வின்சன்ற் அவர்களுக்கும்

நல்ல கற்பனைக்கு உறை விடம்

கடமையும், உழைப்பும்

கடமையிலும் சரி,உழைப்பிலும் சரி

நான் சோர்ந்து விடா வண்ணம்

அவ்வப்போது ஊக்குவித்ததன் மூலம்

வளமான கற்பனைக்கு வழி வகுத்த

திரு. முத்துமணி கனகரட்னம் அவர்களுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு ஒரு வார்த்தை

வடக்கில் கடும் வரண்ட பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த நான் அந்த மண்ணிலே அறிவையும் ஆற்றலையும் அனுபவத்தையும் பெற்றுக் கொண்டவன். அங்கு வாழ்ந்த மக்களோடு மக்களாக ஒன்றுகலந்து சுக துக்கங்களில் சிரித்திருக்கிறேன்; சிலிர்த் திருக்கிறேன்; அழுதும் இருக்கிறேன். அவர்களுக்காக என் எழுது கோலை பிடிப்பதை ஒரு இலட்சிய வெறியாகக் கொண்டிருந்தேன். அந்தக் குறிக்கோளுடன் சிங்களத்தில் அதிகமான சிறுகதைகளை எழுதியிருக்கிறேன். யுத்தம் நடந்துகொண்டிருக்கும் வேளைகளில் மக்கள்படும் பாடுகளை என்னிரு கண்களாலும் பார்த்திருக்கிறேன். இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கசப்பான தன்மைகளை யும், சோகத்தையும் வேற்றுமை மனப்பான்மைகளையும் களைந்தெறிய நான் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன். அதன் முக்கிய குறிக்கோள் களில் ஒன்றுதான் இந்தச் சிங்களச் சிறுகதைகளின் மொழி பெயர்ப்பு.

இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கு மிடையில் பரஸ்பர புரிந்துணர்வு மிகமிகக் குறைவாகக் காணப்படுவதற்கான காரணம் என்ன வெனில் தமிழர்கள் சிங்கள மொழியைக் கற்பதற்கும் சிங்க மக்கள் தமிழ் மொழியைக் கற்பதற்கும் முன் வராமையே ஆகும். ஆனால் இன்றைய தலைமுறையினர், இளைஞர்கள் ஒதுங்கியிருப்பதை விட்டுவிட்டு இரு மொழிகளையும் கற்றுக்கொள்வதற்கு முன் வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு முன்வரும் இளைஞர்களின் முக்கிய குறிக்கோள் என்னவென்றால் இரு இனங்களுக்குமிடையில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதேயாகும்.

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாட்டிலுள்ள தமிழ் எழுத்தாளர்களோ, சிங்கள எழுத்தாளர்களோ, வெளிநாட்டு எழுத்தாளர்களைத் தெரிந்து வைத்திருக்குமளவிற்கு சிங்கள எழுத்தாளர்கள் தமிழ் எழுத்தாளர்களையோ, தமிழ் எழுத்தாளர்கள் சிங்கள எழுத்தாளர்களையோ புரிந்து வைத்துக் கொண்டதில்லை. இந் நாட்டின் இரு இலக்கியங்களைப்பற்றி இரு இனமுமே புரிந்து கொள்ளமுடியாத ஒரு துர்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் இரு இனங்களுக்குமிடையேயுள்ள துன்ப துயரங்களையும் பழக்க வழக்கங்களையும் புரிந்துணர்ந்து கொள்ளாமல் இருப்பதனால் விரிசல் விரிவடைந்து கொண்டே போகின்றது . இது மேன் மேலும் விரிவடையாமல் ஒருங்கிணையக்கூடிய ஒரு பாலத்தை அமைப்பதே என்னுடைய நோக்கமாகும். இதன் விளைவே இந்த முயற்சி.

அத்தோடு தமிழ் எழுத்தாளர் பலரின் சிறுகதை, நாவல்களை சிங்களத்தில் மொழிபெயர்த்து தமிழர் தம் கலை பண்பாடு, பழக்க வழக்கங்கள், பிரச்சினைகளை எடுத்துக்காட்டும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன் என்பதை மனமகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்கிறேன்.

இந்தச்சிறுகதை மொழி பெயர்ப்பின் மூலமாக மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வு எவ்வளவு தூரம் நிலவும் என்பதை என்னால் கூறமுடியாது. ஆனால் அணுப்பிரமாணமாவது இந்த வேறுபாடுகளைக் களைந்தெறிய உதவுமாயின் அதுவே எனது பாக்கியமாகக் கருதுவேன்.

இந்தச் சிறுகதைத்தொகுதியை முழுமையாக வெளிவரு வதற்கு எனக்கு உதவி செய்தவர்களை நான் மறக்க முடியாது.

திரு. கு. இராமச்சந்திரன் இக்கதைகளை மொழிபெயர்ப்பு செய்யத் தொடங்கிய காலந் தொட்டு எனக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்தார். எத்துல் கோட்டே ஸ்ரீ சுனேந்திராராம ஆலய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரான வண. அலிகேவெல சீலானந்த தேரோ அவர்கள் வெகுவிரைவில் மொழிபெயர்த்து தமிழிலக்கிய உலகத்திற்கு அளிக்குமாறு துரிதப்படுத்தினார்.

இலங்கை வங்கி சிங்கள இலக்கியச் சங்கச் செயலாளரான திரு. பி. வீரசிங்க ஒத்தாசையும் ஒத்துழைப்பும் நல்கினார்.

இம் மொழிபெயர்ப்பின் போது எனக்கு அச்சொட்டான தமிழ்ச் சொற்களை எடுத்துக் கூறிய திரு. எஸ். முத்து அவர்களின் உதவியையும் மறக்கமுடியாது.

இலங்கைத் தேசிய நூலகசேவைகள்சபை பொருளுதவி செய்திராவிட்டால் இந்நூலை வெளியிடுவதற்கு அனுமதி கொடுத்திராவிட்டால் இந்நூல் உங்கள் கைகளில் தவழ்ந்திருக்காது. எனவே இலங்கைத் தேசிய நூலகசேவைகள்சபையின் தலைவராகிய திருமதி ஈஸ்வரி கொரையா உட்பட குழுவினருக்கும் சகலவகைகளிலும் உதவி புரிந்த திரு. நெல்சன் பீரிஸுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலுக்கு அழகான அட்டைப்படத்தை வரைந்து கொடுத்த திரு. ஜகத் ஹேவாபன்ன, இந்நூலிலுள்ள சிறுகதைகளை மொழிபெயர்த்து வெளியிட மனமுவந்து அனுமதி அளித்த சிறுகதை எழுத்தாளர்கள், இப்புத்தகத்தை அழகாக அச்சிட்டு கொடுத்த லங்கா பப்ளிஷிங் ஹவுஸ், அதன் ஊழியர்களுக்கும் எனது நன்றியை சொல்லத்தானே வேண்டும்.

தக்ஷிலா
பேஷகர்ம மாவத்த
அம்பலங் கொடெல்ல,
மடுகந்த, வவுனியா.

**மடுளுகிரியே விஜேரத்ன**
211/4, இஹல கொஸ்கம
கொஸ்கம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


**மீன் வலை**

மடுளுகிரியே விஜேரத்ன 1 – 23

**வண்டில்**

சோமரத்ன பாலசூரிய 24 – 43

**தந்தை**

சரத் விஜேசூரிய 44 – 56

**கறுப்பு சப்பாத்துகள்**

ஜயதிலக கம்மெல்லவீர 57 – 70

**பிசாசின் இரவு**

தயாசேன குணசிங்க. 71 – 78


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் வலை

### மடுளுகிரியே விஜேரத்ன

நிசப்த இரவின் கும்மிருட்டினால் வாவியின் நீர்நிலை சலனமற்று இருப்பதாக சாதிரிஸுக்குப்பட்டது. இரவை கும்மிருட்டுப் போர்த்துக் கொண்டிருந்தாலும், தெரு விளக்குத்தூண் உமிழும் ஒளிக்கீற்றுக்கள் ஆங்காங்கே நீரில் விழுந்து வெள்ளிச் சரிகையாய் தகதகத்தது. வாவிக்கரையோரம் வைக்கப்பட்டிருந்த படகுக்கு அருகே சென்ற சாதிரிஸ் நிர்மலமான மனோநிலையிலிருந்து தெய்வத்தை வேண்டியபடி, இன்றைக்காவது வழக்கத்திற்கு அதிகமாக மீன் அகப்பட்டால், பிள்ளைகுட்டிகளுக்கும் பெண்சாதிக்கும் வாய்க்கு ருசியாக ஒரு வேளையாவது சாப்பாடு கொடுக்க வாய்ப்பாக இருக்கும் என்று எண்ணினான். சாதிரிஸ் மூன்றங்குல வலையை மெதுவாக படகில் வைத்தபடி ஆயிரமாயிரம் அபிலாஷைகளை மனதுக்குள் தேக்கிக்கொண்டான்.

கும்மிருட்டோடு ஒன்றித்துப்போன கூதல், உடம்பே மரத்துப்போகும் அளவுக்கு கடுமையாக இருந்தது. தலையை ஊடுருவி மூளையைத் தாக்குமளவுக்கு வலிமையோடிருந்தது. சாதிரிஸ் மனதைத் திடப்படுத்திக் கொண்டான். என்றுமே இல்லாத வைரமனப்பான்மை அவனை ஆக்கிரமித்திருந்தது. எனினும் ஒரு கணத்தில் எல்லாவற்றையும் மறந்துவிட்டு சாதிரிஸ் படகின் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டான். சவளைக் கையி லெடுத்த சாதிரிஸ் வாவிக்கரையோரமிருந்த பற்றையூடாக வலிக்க தயாரானதுதான் தாமதம், உடனே சவள் கைதவறி விழுந்துவிட்டது. அபசகுனம் என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்ட சாதிரிஸ் நீரில் இறங்கினான். அவ்வளவு ஆழமில்லாதபடியால், உடனே சவளைத் தேடியெடுப்பதற்கு சுலபமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுப்பளவு தண்ணீரே இருந்தது. காற்றின் குளிரை விட கடும் கூதல் அவன் உடம்பை ஊடுருவியது. உடனேயே சவளை வலிப்பதற்கு தொடங்கவில்லை. படகில் அவன் ஓரிரு விநாடி அப்படியே இருந்தான். அவனுடைய எண்ணங்கள் ஏதேதோ எண்ணி அலைமோதியது.

"ஒருநாளும் இல்லாமல் சவள் கைதவறிவிட்டது இன்று ஒரு தரித்திரம் பிடித்த நாள். இன்று யார் முகத்தில் முழித்தேனோ தெரியவில்லை," இவ்வாறு எண்ணிய அவன் படகில் மேலும் கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தான்.

"கொஞ்சநேரம் இருந்து பார்ப்போம். ஒரு நாளும் இல்லாதவாறு தடையானதல்லவா"? வலையை விரிக்கும் நினைவு வரவில்லை. அவன் முன்னால் இருக்கும் பொருளாதார பிரச்சினையோ ஏராளம். அவற்றைத் தீர்ப்பதற்கு அவனுக்குள்ளவை படகு, வலை, வாவிதான். மறுகணம், மனதை ஆசுவாசப்படுத்திக்கொண்ட சாதிரிஸ் வலிக்கத்தொடங்கினான். நீரைக் கிழித்துக்கொண்டு படகு முன்னே சென்றது. ஆரம்பத்திலிருந்த ஆத்திரமும் கவலையும் தணிந்திருந்தது. முன்னேறிச் செல்லும் படகு, தண்ணீரில் மிதப்பதைப்போல அவனும் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான்.

இருள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாலும், வாவியின் சமீபத்திலிருந்த தெருவிளக்கிலிருந்து பரவிய வெளிச்சம் காரணமாக அவனுக்கு எந்த விதமான சிரமமும் இருக்கவில்லை. வாவியின் ஆழமான பகுதிக்குச் சென்ற சாதிரிஸ் திரும்பி கரையை நோக்கி ஒரு தடவை கண்ணோட்டமிட்டான். பெரும்பூதங்கள் வரிசைவரிசையாக இருப்பதுபோல் கூமா மரங்கள் காட்சியளித்தன. இடையிடையே இருந்த சின்னச்சின்ன மரங்கள் பென்னம் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்களை அண்டியிருக்கும் சின்னஞ்சிறிய பூதங்கள் போல தென்பட்டன. அவனுடைய மனம் ஆட்டம் காணவில்லை. ஆகாயமோ கன்னங்கரேலென்று இருட்டாக இருந்தது, கல்லரிக்கும் சட்டியில் கரிபடிந்திருந்ததுபோல் தெரிந்தது. இரவில் மழை பெய்து மண் ஈரலித்துவிட்டால், அவனுடைய மீன்வட்டி மலையாய் கனக்கும் என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும். எத்தகைய அமாவாசை இருட்டு சுற்றும் முற்றும் வளைத்திருந்தாலும் அதையும் ஊடுருவிப் பார்க்கும் சக்தி அவன் கண்களுக்கு இருந்தன. சவளை விடாமல் வலித்து மேலும் முன்னேறிச் சென்றான். சாதிரிஸினுடைய விடாப்பிடியான சவள் வலிப்பினால், படகு உந்துவிசையாகச் சென்றதுடன் அலைகளை கிழித்துக்கொண்டு மேலும் முன்னேறியது. நீரினாலும் சுற்றாடலின் குளிரினாலும், கூதல் அவனை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தது. காற்றின் கூதலும், அலையும் அவனை தாக்கத்துக்குள்ளாக்கினாலும் அவன், அதை பொருட்படுத்தவில்லை. குளிரையும் மீறிச் சென்ற அவன், வழக்கமாக வலையை விரிக்கும் இடத்திற்குச் செல்லாமல் அதற்கும் அப்பால் அவன் சென்றான்.

சவள் வலிப்பதை நிறுத்திவிட்டு அவன் வலையை விரிக்கத் தயாரானான்.

வாவியின் நடுவில் வலையை வீசிய அவன், ஒரு விளிம்பை விட்டு மற்றைய விளிம்பை வாவியின் கரையை நோக்கிப் போட்டான். வலையின் மிதப்புகள், நீரின் மேல் மிதப்பதைப் பார்க்கும் எவருக்கும் தண்ணீரில் விரிக்கப்பட்டிருப்பது வலையல்ல ஆமைகள் என்று சொல்லிவிடுவார்கள். வலையின் மிதப்புகள் ஒரு சீராக விழுந்து கிடப்பது நீரினங்கள் கூட்டமாக மிதப்பது போல் காணப்பட்டன. மெல்லமெல்ல சவளால் நீரை விலக்கிக்கொண்டு கரைவரைக்கும் வலையை விரித்தான். சிற்சில இடங்களில் சேற்றுக்களப்பு



UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதால் அவன் கீழிறங்கவில்லை. காலை வைத்து விட்டால் கால் புதைந்துவிடும். அந்தக் காலை எடுத்துவிட்டு மற்றக் காலை வைத்து விட்டால், அதுவும் புதைந்து விடும். படகில் இருந்தபடியே, வலையின் விளிம்பை கூமா மரத்தில் கட்டிய சாதிரிஸ், மீண்டும் சவளை வலிக்கத் தொடங்கினான். தொடர்ந்தும் விடாமல், சவளை வலித்த அவன், வழக்கம்போல் படகை கரையொதுக்கும் கூமா மரத்தினை நோக்கி நெருங்கிச் சென்றான்.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எவருமே தட்டுப்படவே இல்லை. சுற்றும் முற்றும் இருள் கவ்விக் கொண்டிருந்தாலும் விளக்குத் தூணின் மின்னொளி அந்தகாரத்தின் சக்தியைக் குறைத்திருந்தது. ஒரு நட்சத்திரமாவது வானவிதானத்தில் காணப்படாமையால் ஏனைய நாட்களை விட ஆகாயம் முழுவதும் இருள் அப்பிப் போயிருந்தது. காற்றோடு ஒன்றித்துவிடும் அலைகள் சற்றுக் குளிரை அக்கம் பக்கம் பரப்பிக்கொண்டிருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாய் தவளைகளின் புலம்பல் கேட்டாலும் இரவில் பூச்சிகள் எழுப்பும் வாத்திய விருந்துகள் தாளகதியில் இருந்தன. இரவு பத்துமணியளவில் இருக்கும் என்று சாதிரிஸ் நினைத்தான்.

தண்ணீரை விட்டு மேலே வந்த சாதிரிஸ் சற்றுத் தொலை—வுக்கப்பால் இருந்த ஒற்றையடிப்பாதையில் வீட்டை நோக்கிச் செல்லும் பொழுது மேல் வீட்டு வங்கி உத்தியோகத்தரின் சுவர்க்கடிகாரம் இரவு பத்து மணி அடிக்கும் சத்தம் கணீரென்று காதில் விழுந்தது.

"ஜோஸப்பினா.......... ஜோஸப்பினா....." ....... அவனுடைய குரல் சற்றுப் பலமாக இருந்ததால் அமைதியைக் கலைத்து வீடு முழுவதும் எதிரொலித்தது. தொடர்ந்தும் அவன் மகளைக் கூப்பிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகளே சாப்பிட என்ன செய்தாய்?"

தூக்கத்திலிருந்த ஜொஸப்பினா அப்பாவின் குரலைக் கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள். என்ன பதில் சொல்வதென்றே அவளுக்குப் புரியவில்லை. கடைசியாக அப்பா என்ன சொல்லியிருப்பார் என்று ஒருவாறு யூகித்துக் கொண்டு வாய்க்கு வந்த பதிலை சொல்லிவிட்டாள்.

"அதிகமாக செய்வதற்கு ஒன்றுமே இல்லை அப்பா. மரவள்ளிக் கிழங்கை அவித்து தேங்காய் கொஞ்சம் துருவினேன்."

வாய்க்கு ருசியாகச் செய்வதற்கு எதுவுமே இல்லையென்பது சாதிரிஸுக்குத் தெரிந்த விவகாரம் தான்.

"ஆமாம் நேற்று அகப்பட்டதே கொஞ்சம். இரண்டு வேளைக்கு அரிசியும் மசாலாதூள் கொஞ்சமும் வாங்கவே காசு காலியாகிவிட்டது. சாமான்கள் என்ன மாதிரி விலையேறிப் போச்சு. எப்படித்தான் வாழ்வதோ எனக்கென்றால் தெரியவில்லை. இந்த யுத்தம் என்றைக்குத்தான் முடிவுக்கு வருமோ? சாமான் விலை என்றைக்குத் தான் இறங்கும் என்று சொல்லவும் முடியாது. ஜொஸப்பினா எங்கே உங்க அம்மா?"

"சின்னத் தம்பியைதூங்க வைத்துக் கொண்டிருக்கிறாங்க, இப்போ தான் அம்மா முழிச்சாங்க."

"எனக்குப் பசிக்குது நீயாவது சாப்பிட இருக்கிறதைக் கொண்டு வா"

"இல்லையப்பா.......... நான் அம்மாவிடம் சொல்லுறேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பெண்சாதியின் கையாலயே ஒரு வேளை சாப்பாட்டைச் சாப்பிடுவதற்கு விரும்பியதால், சாதிரிஸ் எதுவுமே பேசவில்லை. தேங்காய்ச் சம்பலோடு மரவள்ளிக்கிழங்கை தனது பெண்சாதியின் கையால் சாப்பிடும் போது அது அவனுக்கு தேவாமிர்தமாக இருந்தது.

அப்பாவும் மூத்த மகளும் பேசிக் கொள்வதை மெகலின் காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தாள். இரவு பத்து மணி யாகிவிட்டதால் அவளுடைய விழிகள் தூக்கத்தில் சொக்கின. இளமையின் காலத்தைப் போல் மெகலினுக்கு தூக்கம் விழிப்பது என்பது முடியாத காரியமாக இருந்தது. இளமையின் முறுக்கான தன்மையை இழந்த அவள் எந்த நேரமும் தன் குடும்பத்தைப்பற்றி சிந்தித்து அதன் வளர்ச்சிக்காகப் பாடுபடுபவள். அவளுடைய ஊக்கமும் உற்சாகமும் சாதிரிஸுக்கு ஒரு பலமாக இருந்தது. பாயைவிட்டு எழுந்த அவள் சமையலறைக்குச் சென்றாள். வேறெதுவுமே இல்லாததால் தன் புருஷனுக்கு மரவள்ளிக் கிழங்கைப் பரிமாறினாள். எந்த வேலை வெட்டி செய்தாலும் அவள் நினைவுக்கு வருவது குழந்தை குட்டிகளை வளர்த்தெடுக்கும் சிந்தனைதான். மூத்தமகள் ஜொஸப்பினா படிப்பில் மிகக் கெட்டிக்காரியாக இருந்தாலும் அவர்களுக்கு பணம் செலவழிக்க வழி இல்லாத காரணத்தினால்தான் இடைநிறுத்தப்பட்டாள். மீன்பிடித் தொழிலைச் செய்துவந்தால் ஒரு நாளும் தலை தூக்கமுடியாது என்பதை நன்றாகவே உணர்ந்திருந்தாள். சின்னஞ் சிறு வயது தொட்டு இந்தத் தொழிலில் பழக்கப்பட்டுவிட்ட சாதிரிஸுக்கு வேறெதுவுமே செய்ய முடியாதென்பதையும் அவள் திட்டவட்டமாகத் தெரிந்தே வைத்திருந்தாள். மெகலினுடைய சிந்தனை உலகம் ஜொஸப்பினாவின் குரலால் தகர்ந்தது.

"அம்மா அப்பா வந்துட்டாங்க. அப்பாவுக்கு பசிக்குதாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம் மகளே, ராத்திரி முழுவதும் தண்ணீரிலேயே கிடந்து உங்களுக்காகவே சாப்பாட்டுக்காகவே வழிதேடும் இந்த மனுஷனுக்கு பசிக்கத்தான் செய்யும். என் கையாலேயே அவருக்கு ஒரு வேளை சாப்பாடு போட்டால் அவர் மிகவும் சந்தோஷப்படுவார். நீ இதைக் கொஞ்சம் ஒதுக்கி விட்டு படுத்துக்கொள்."

மெகலின் பகலில் ஆக்கிவைத்த கருவாட்டுசொதி கொஞ்சமும் சாதிரிஸின் இரவுச் சாப்பாட்டில் சேர்த்துக் கொடுக்க அவள் மறக்கவில்லை. அவள் அவனுக்கு சாப்பாட்டைக் கொண்டு போனபோது அவன் ஆழ்ந்த யோசனையில் இருந்தான்.

"இங்கே கேட்டியா? பிள்ளை குட்டிகள் சாப்பிட்டாங்களா?"

"அவர்கள் சாப்பிட்டு தூங்கி ரொம்ப நேரமாச்சு."

"பிள்ளை குட்டிகள் வயிறு நிறைய சாப்பிட சோறு கொடுக்க முடியாமற் போச்சே. இப்படியே போனால் வாழ்க்கை எங்கே போய்த் தான் முடியுமோ தெரியாது."

பல்வேறான சிந்தனைகள் பேயைப்போல் ஆட்டிப்படைத்ததால் நித்திரை என்ற தேவகன்னிதன்னை அரவணைத்துக் கொள்ள இடமளிக்கவில்லை. விடியற் பொழுதில் வலையைப் பார்க்க வேண்டியிருப்பதால் அவன் தூக்கத்தை தானே வரவழைத்துக் கொண்டான்.

வங்கி உத்தியோகத்தரின் சுவர்க்கடிகாரம் விடியற்சாமம் நாலுமணி அடிக்கும் சத்தத்தைக் கேட்டு சடுதியில் எழுந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிரிஸ். மெகலின் ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள். நாலரை மணிக்குப் போனால் போதும் என அவனது அடிமனம் சொன்னது. கூதலோடு ஒன்றிணைந்த ஆசா பாசங்கள் ஆனந்த மயமான நிலைக்கு அவனை ஆட்படுத்தியது. உடல் முழுவதும் மோகக்கிளுகிளுப்பை ஊட்டி விரகத்தை உண்டு பண்ணி விட்டது. மெகலினை நெருங்கும் நினைப்பு தலை தூக்கியது.

குளிரினால் ஏற்பட்ட உணர்ச்சி உடலையும் உள்ளத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டு மேனியெல்லாம் ஊடுருவிவிட்டது. அத்தோடு குழந்தை குட்டிகள் நினைவும் வந்துவிட்டது. அவர்களின் பசியும் மனதில் தோன்றிவிட்டது. அக்கம் பக்கம் பனி கொட்டும் மழை போல் தெரிகிறது. இரவிருந்த குளிரைவிட கடும் குளிராக அவனுக்கிருந்தது. அவனது எண்ணம் வாயு வேகத்தை விட துரிதமாக இருந்தது. அடைத்த தொண்டையை செருமி சளியை சரிக்கட்டிக் கொண்டான்.

"ஏய் காதில் விழலையா? இன்னுமா நீங்கள் தூங்குகிறீங்க? விடியற்காலை நாலுமணி ஆகிவிட்டது."

மெகலினிடமிருந்து எந்த விதமான பதிலும் வரவில்லை. கடுமையான கூதல் காரணமாக ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள். சாதிரிஸின் முதற் குரலுக்கு ஜோஸப்பின் உடனே கண் விழித்தாள்.

"ஏம்பா நீங்க கூப்பிட்டீங்க?"

"ஜோஸப்பினா வலையைப் பார்க்கப் போகவேண்டும். சாயம் கொஞ்சம் குடித்தால் நல்லது. அம்மாவை எழுப்ப வேண்டாம் பகல் முழுவதும் கஷடப்பட்டு தூங்குகிறாள். அதனால் தூங்க விடு. வானம் இருண்டு கொண்டு வருவதனால் இரவு மழை பெய்ததால் மீன் அதிகமாக விழும். அப்போதாவது வயிறு நிறைய ஒரு வேளை சாப்பாடு கொடுக்கலாம் தானே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெகலின் தன்னுடைய கணவனின் வார்த்தைகளுக்கு காது கொடுத்தாளே தவிர வாய் திறந்து ஒன்றுமே சொல்லவில்லை.

வராந்தாவில் படுத்திருந்த சாதிரிஸுக்கு பூச்சியினங்களின் புலம்பல் வழக்கம் போல் கேட்டது. வானம் சூல் கொண்டிருந்ததனால், ஏனைய நாட்களை விட காற்று கடுமையாகவே இருந்தது. வாவியிலிருந்து நிரந்தரமாக வீசிக்கொண்டிருந்த தென்றல், சுற்றுமுற்றுமுள்ள வாயுவின் ஈரலிப்பில் குளிர்த்தன்மையோடு கலந்துவிட்டது. கடுமையான குளிர் காரணமாக சாதிரிஸ் போர்வையை நன்றாக இழுத்து மூடிக்கொண்டான். இருந்திருந்து வரும் இருமல் தாங்கிக்கொள்ளமுடியாத அளவுக்கு மீறிவிட்டது. இருமலுடன் வெளியைப் பார்க்கும் அவனது விழிகளுக்கு மின்குமிழ்கள் மினுங்குவது மினிமினிப் பூச்சிகள் மரங்களுக்கிடையே இருப்பது மிகத் தெளிவாகத் தெரிந்தது. அவனுடைய உள்ளம் அங்கும் இங்கும் அலைக்கழிந்ததால் அவனுக்கு தூங்கிக்கொள்ள முடியவில்லை. அவன் பாயில் எழுந்து உட்கார்ந்து கொண்டான். தலையணையின் அடியில் இருந்த தீப்பெட்டியை எடுத்த சாதிரிஸ் சுருட்டைப் பற்றிக் கொண்டான்.

நித்திரை என்ற தேவதை எங்கேயோ சென்றுவிட்டாள் போலும். அவனுக்குத் தூக்கமே வரவில்லை. சுருட்டை இழுத்துக்கொண்டு இருக்கும் வேளையில் அவனுடைய சிந்தனைகள் வளைய வளைய வந்தன. சுருட்டைப் புகைத்துக் கொண்டிருக்கும்போதே அவனுடைய நினைவில் தவிர்க்கமுடியாத பயமொன்று வலம் வந்து கொண்டிருந்தது. இன மறியாத அப்பயத்தை அவன் தேடி ஆராய முயன்றான். வாழ்க்கையில் எந்தநாளும் பற்றாக்குறை தங்கள் மத்தியில் இருப்பதை உணர்ந்தான்.

UNIVERSITY OF PERADENIYA
17 - 2 - 1996
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்பிடிதொழிலைச் செய்யும்போது இன்னொரு தொழிலையும் தேடிக்கொள்ள வேண்டும் என்று அவன் நினைத்தான். தொழிலைச் செய்வதற்கு கையில் கொஞ்சம் பணம் இருக்க வேண்டும் என்றும் சிந்தித்தான். என்னதான் இருந்தாலும் மீன் பிடித் தொழிலைப் போல் நன்றாக பழக்கப்பட்ட வேறு ஒரு தொழிலும் தனக்கு இல்லை என்பதை மீண்டும் நினைத்துப் பார்த்தான். பகலிலும் ஒரு தடவை வலை விரித்து மீன் பிடிக்க வேண்டும் என்ற புதிய யோசனையும் உண்டானது.

சமையலறைக்குப்போன ஜொஸப்பினா தண்ணீர் கேத்தலை அடுப்பின் மீது வைத்தாள். பலவித எண்ணங்கள் மனதுக்குள் நுழைவதற்கு கடும் கூதல் இடமளிக்கவில்லை. குளிர் காய்வதற்காக அவள் அடுப்பின் அருகே மேலும் நெருங்கினாள். நெருப்பினை மூட்டினாள், படிப்படியாக கூதல் விலகியது. ஜொஸப்பினா சாயக் கோப்பையை சாதிரிஸின் கையில் கொடுக்கும்போது கவ்வியிருந்த இருள் மேல்ல விலகத் தொடங்கியது .

"சீக்கிரமாகக் குடித்துவிட்டு போகவேண்டும். பொழுது விடிந்து விட்டால் மீனுக்கு கெஞ்சிக் கூத்தாட வேண்டும்."

மகள் ஒன்றுமே பேசாமல் இருந்தாள். எங்களை வாழ வைக்கத் தானே அப்பா இவ்வளவு தூரம் கஷ்டப்படுகிறார் என்ற பலத்த யோசனையில் ஆழ்ந்து விட்டாள். ஜொஸப்பினா அப்பாவையிட்டு மிகவும் கவலைப்பட்டாள்.

கையில் எடுத்த கொஞ்சம் சீனியோடு இரண்டொரு மடக்கு சாயத்தை குடித்து விட்டு எழுந்தான். வெளியில் இறங்கும்போது முற்றமே தெரியாதளவுக்கு பனி மூடியிருந்தது. பனியால் தலை நனைவதற்கு இடமளியாமல் துண்டு ஒன்றை கட்டிக்கொண்ட சாதிரிஸ் ஒற்றையடிப் பாதை வழியாக வாவியை நோக்கி சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய நாட்களில் வாவியின் மேற்புறமுள்ள பிரதான வீதியில் நில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்கள் இன்று இல்லை. முழுப் பிரதேசமுமே வெறிச்சோடி சூன்யமாக கிடந்தது. எதுவுமே தெரியாத சாதிரிஸ் அவன் பாட்டில் நடந்து போய்க்கொண்டிருந்தான். அதிகாலைப் பொழுது ஏனைய நாட்களைப் போல் இல்லாது ஒரு பாழடைந்த சூழ்நிலையாக அவனுக்கு தென்பட்டது. அவன் வாவியை நெருங்கியதுதான் தாமதம் ராணுவவீரர்கள் சிலர் காவல் காத்துக்கொண்டிருப்பதைக் கண்டான். "இன்று ஏன் இராணுவ வீரர்கள் காவல் காக்கிறார்கள்? ........ அப்படியென்றால் மிகவும் கவனமாக போக வேண்டும்". அவன் தனக்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டான். ஒரு இராணுவவீரன் சாதிரிஸைக் கண்டுவிட்டான். இராணுவவீரனின் துப்பாக்கி முனையை நோக்கி எந்தவித மாற்றமும் இன்றி சாதிரிஸ் நடந்தான்.

"ஏய் நில்லு."

சாதிரிஸ் ஒரேயடியாக அதிர்ச்சியடைந்துவிட்டான். அவனுடைய நாக்கும் தொண்டையும் வரண்டு அடைத்துக்கொண்டது போல் இருந்தது. தன்னை எந்த தவறுக்காக நிறுத்துகிறார்கள் என்று அவனுக்கு புரியவில்லை. என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்று அவனால் உணரமுடியவில்லை. அவன் செய்வதறியாது பிரமை பிடித்தவன் போல நின்ற நிலையில் நின்றான். எந்தவிதமான பேச்சு மூச்சில்லாமல் முன்னே வந்த இராணுவவீரன் அவனுடைய கையில் இருக்கும் துப்பாக்கியால் குறிபார்த்தபடி சாதிரிஸை நோக்கி வந்தான். அவனுடைய வாயிலிருந்து வார்த்தைகள் இடிமுழக்கம் போல் முழங்கின. அந்த வார்த்தைகள் சாதிரிஸின் செவிப்பறையைத் தாக்கி அங்கமெல்லாம் ஊடுருவியது. இதுவரை நிர்மலமான உள்ளத்துடன் இருந்த சாதிரிஸின் உள்ளத்தை பயம் பற்றிக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்று ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டிருப்பது உனக்கு தெரியாதா? "காலையிலேயே வெளியே கிளம்பியிருக்கிறாய்?"

"ஐயோ எனக்குத் தெரியாது ஐயா."

"அப்படியென்றால் இப்பொழுது தெரிந்துகொள் இன்று ஊரடங்குச் சட்டம் என்று . ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டிருக்கும் நேரத்தில் அரசாங்க அதிபருக்கு கூட நடமாட அனுமதியில்லை. சட்டம் எவருக்கும் ஒன்று. அதனாலே சாகாமல் இங்கிருந்து போ."

"ஐயோ ஐயா அந்த வலையை எடுக்காது போனால்..... பிள்ளைகளுக்கு கஞ்சி கூட கொடுக்க முடியாமல் போய்விடும். அதிலிருக்கும் மீன்களை கருவாட்டுக்காவது மொத்தமாக அடுத்த வீட்டு முதலாளிக்குக் கொடுக்க முடியும்."

"ஏய்.. அந்தப் பேச்செல்லாம் இங்கு தேவையில்லை. அரசாங்கச் சட்டம், ஊரடங்குச் சட்டம் யாருக்குமே வாவிக்குச் செல்ல அனுமதி கிடையாது. அதனாலே துப்பாக்கி விசையை இழுப்பதற்கு முன்னே திரும்பி போ."

இராணுவவீரன் தனக்கு விதிக்கப்பட்டிருக்கும் கடமையை செய்வதற்கு தயாராக இருந்தான். சாதிரிஸ் ஒன்றுமே செய்யமுடியாத நிலையில் அப்பாவித்தனமாக பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய கனவுலகம் கறைபடிந்த ஓவியம் போல் ஆகிவிட்டது. அவன் நொடிந்துபோன உள்ளத்தோடு திரும்பிச் சென்றான். மீண்டும் ஒரு தடவை மீன் வலையை நோக்கி திரும்பிப்பார்த்தான். தண்ணீரின் மேலே மிதக்கும் மிதப்புகள் ஒரு நாளும் இல்லாதவாறு மூழ்கிக்கிடந்ததை அவன் உணர்ந்தான். திரும்பிப் போவதற்கு அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. மிகுந்த பயத்துடன் மிகவும் தளதளத்த குரலில் அவன் சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ எங்க ஐயாவே, என் மீது இரக்கப்பட்டு பிள்ளைகளுக்கு கஞ்சி கொடுக்கவாவது மீன் வலையை எடுக்க விடுவீர்களா?"

இராணுவ வீரனிடம் முன்னர் இருந்த ரௌத்திரப் போக்கும் கோபாவேசமும் மறைந்துபோய் உள்ளம் இளகிப் போனது. அவனுக்கு அவனுடைய வீட்டு நினைவு வந்துவிட்டது. அம்மா, அப்பா, தம்பிகள், தங்கைகள், எல்லோரும் அவனுடைய உள்ளத்தில் திரைப்படமாகத் தோன்றினார்கள். அம்மா என்ன சாப்பிடுகிறார்களோ தெரியாது...... எழவு பிடித்த ஊரடங்குச் சட்டம். ஏழை மக்களுக்கு வீட்டில் ஒன்றுமே இல்லாத மக்களுக்கு, அன்றாட காய்ச்சிகளுக்கு எப்படித்தான் இந்த நாட்கள் கழியுமோ தெரியாது. இந்த மனிதனும் பிள்ளை குட்டிகளைக் காப்பாற்றத்தானே இந்தத் தொழிலைச் செய்கின்றான். இராணுவவீரனின் மனதில் உதித்த எண்ணங்கள் தூரா தூரம் சென்று அவனுடைய இதயத்தை அல்லாட வைத்தது. தன்னைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஏதோ ஒரு சக்தி எதையும் செய்யவிடாமல் ஆட்டிப்படைத்தது. அவனுடைய உள்ளத்திலிருந்து கோபாவேசமும் குரூரத்தன்மையும் மேலே எழுந்து சிறகடித்தது. ஆயினும் அவனால் ஒன்றுமே செய்யமுடியாமலிருந்தது. சட்டமென்ற மாயை அவனை சுற்றிவளைத்திருந்தது. மனதுக்குள் சுழன்று கொண்டிருந்த எண்ணங்கள் கோப்ரலின் குரலில் சிதறிப் போனது.

"வீரசேன.. வீரசேன...... அந்த மனுஷனோட என்ன அவ்வளவு பேச்சு? சீக்கிரம் விரட்டும்..... ஊரடங்குச் சட்டமென்று அந்த மனுஷனுக்குத் தெரியாதா?"

"நல்லது சேர்......."

கோப்ரலுக்கு மரியாதை செலுத்தி இராணுவவீரன் சாதிரிஸை நோக்கித் திரும்பினான். இராணுவவீரன் உள்ளத்தில் இவ்வளவு



UNIVERSITY OF PERADENIYA
17 - 2 - 1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமும் இருந்த எண்ணங்கள் அனைத்தையும் மறந்து உதறிவிட்டு மீண்டும் அவன் உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டான்.

"ஏய் உன்னோடு எனக்கு ஒரு கதையும் கிடையாது இங்கிருந்து போகத்தான் சொன்னேன். சட்டத்தை நாங்கள் சரியான முறையில் அமுல் நடத்துகிறோம்."

சாதிரிஸ் அதற்கு மேலே ஒரு வார்த்தையும் பேசவில்லை. வாயை மூடி மௌனமாகத் திரும்பிவிட்டான். சொல்லமுடியாத அளவுக்கு வேதனையும் கோபமும் ஏற்பட்டது. வேதனையாலும் கோபத்தாலும் நிர்க்கதியான சாதிரிஸ் விரைவாக எட்டி நடை போட்டான்.

பனிப்படலத்தை நீக்கி இளங் கதிரைப்பரப்பி சூரியன் பூமியைக் குளிப்பாட்டினான். சாதிரிஸ் வராந்தைக்கு வந்து விட்டான். அவன் முகத்தில் புன்னகை கூட இல்லை. அவனது முகத்தில் காணப்பட்ட சோகம் மெகலினுக்கு ஒரு பிரச்சனையாக இருந்தது. அவளுடைய உள்ளம் சற்று அதிர்ச்சிக்குள்ளாகவே அவள் சாதிரிஸிடம் சென்றாள்.

"என்ன நீங்கள் என்னமோ மாதிரி இருக்கிறீங்க?"

கோபத்துடனும் வெறுப்புடனும் அவன் ஆத்திரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டினான்.

"வலையை எப்படி எடுப்பது? ஆமிக்காரர்கள் பேய்களைப் போல காத்துக் கொண்டிருக்கிறார்கள்."

"என்னது ஆமிக்காரர்கள் காவல் காக்கிறார்களா? ஏன் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊரடங்குச் சட்டம் போட்டிருக்கிறார்களாம்"

"எங்களுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாதே. ஊரடங்குச் சட்டம் போட்டிருக்கிறார்களா? எதற்காக இன்று போட்டிருக்கிறார்கள்? வீட்டில் ஒரு துளி சாமான் கிடையாதே. பிள்ளை குட்டிகளுக்கு என்ன சாப்பாடு கொடுப்பது?"

"எப்படியாவது மீன் கொஞ்சம் கொண்டு வந்தால் தோட்டத்தைத் தாண்டிப்போயாவது முதலாளிக்கு கருவாட்டுக்குச் சரி கொடுக்கமுடியும். முதலாளி கடையில் எதையாவது கொஞ்சம் வாங்கிக் கொள்ளலாம். அதற்கும் சனீஸ்வரன் பிடிச்சுட்டு."

"நீங்கள் கலவரமடைய வேண்டாம் இன்னும் கொஞ்ச நேரம் கழித்துப் போய்ப் பாருங்கள். சிலவேளை வலையை எடுக்க விடுவார்கள். ஊரடங்குச் சட்டம் போட்டவுடனே கொஞ்சம் கெடுபிடியாகத்தான் பார்ப்பார்கள். அதற்குப் பிறகு கொஞ்சம் தளர்த்தி விடுவார்கள்." மெகலினுடைய வார்த்தைகளினால் சாதிரிஸின் கோபமும் கவலையும் தணிந்து போனது."

"சரி பார்ப்போமே"

"குழந்தை குட்டிகளுக்கு காலைச்சாப்பாடு கொடுப்பதற்கு ஒன்றுமே இல்லை. மரவள்ளிக் கிழங்கு கொஞ்சத்தையாவது ஐயாவின் தோட்டத்தில் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும்."

"அதுக்கும் கொஞ்சம் காசாவது கொடுக்கத்தானே வேண்டும்."

"இல்லை . . . நான் பிறகு காசு தாரேன் என்று ஐயாவுக்குச் சொல்வேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிரிஸ் ஒன்றுமே சொல்லவில்லை. அவன் யோசனையில் ஆழ்ந்துவிட்டான். மீன்வலையைப் பற்றி யோசித்த அவனுக்கு காலைச்சாப்பாடு சாப்பிட மனம் வரவில்லை. காலையில் நடந்த சம்பவங்களைப் பற்றி யோசிக்கும் போது அவனுடைய சுமையான மனசு ஏதோ ஒரு வேதனையில் மூழ்கியிருந்தது. யோசனையுடன் என்ன செய்வதென்று சிந்திக்கத் தொடங்கினான். ஒரு மணித்தியாலமாக தொடர்ந்து யோசனையென்ற சமுத்திரத்தில் ஆழ்ந்து போன சாதிரிஸ் வாவிக்குப் போவதற்கு எழுந்தான். வாவியின் அலைகள் முன்னையவிட சற்று வேகமாக வீசியது. முன்னிருந்த இராணுவவீரர்கள் காணப்படவில்லை. சாதிரிஸுக்கு தலைகால் புரியாத ஆனந்தம் ஏற்பட்டது. அவன் நடையைத் துரிதப்படுத்தினான். இரண்டொரு அடி முன்னெடுத்து வைத்ததுதான். தாமதம், ஒரே தாவாக பற்றைக்குள் பதுங்கியிருந்த இராணுவ வீரர்களின் குரல், முழுச் சுற்றாடலிலும் எதிரொலித்தது.

'ஹோல்ட்'

சாதிரிஸ் அப்படியே அப்பாவியாக நின்றான்.

"எங்கேடா போறே? நான் ஒரு முறை சொன்னேனல்லவா? பெரியவர் கண்டால் நீ தொலைந்தாய்."

"ஐயா புண்ணியவானே, வீட்டில் ஒரு உப்பு புளி கூட இல்லை. பிள்ளை குட்டிகளுக்கு மீன்களைக் கொஞ்சம் எடுத்துக் கொண்டுபோய் அவித்துக் கொடுக்கலாம் என்று எண்ணித்தான் வந்தேன்."

இராணுவவீரனின் மனதுக்குள் வேதனை ஏற்பட்டது. ஏதாவது உதவி செய்ய அவன் மனம் தூண்டப்பட்டது. சந்தர்ப்பவசத்தால் எதுவுமே அவனுக்கு செய்யமுடியாமற் போனது. குழுவில் அங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகிக்கும் கோப்ரல் சட்டத்தை தவறாமல் நிறைவேற்றும் இராணுவ அதிகாரி. அவனுடைய பார்வையே குரூரமானது. கோப்ரலின் கண்மணிகள் கொரக்காவின் சதையைப் போலசெக்கச்செவேலென இருந்தது. எந்த நேரமும் குடிவெறியனாக இருக்கும் அவன் ஒரு தடவைதான் உபதேசம் செய்வான். அதைப்பற்றி இராணு வீரனுக்கும் தெரியும். மறுபடியும் அவனைக் கண்டால் என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்று தெரியாது.

"ஐயா பெரியவரே, நான் இங்கு கடமையைத்தான் செய்கிறேன். உங்களுடைய கஷ்டம் எனக்கு நல்லா தெரிகிறது. நான் உங்களுக்குச் செய்யக்கூடியது இங்கு ஒன்றும் கிடையாது. எங்கள் பெரியவர் கண்டால் விசையை இழுத்துவிட்டுத்தான் மறுவேலையைப் பார்ப்பார். அதனால் நான் என் வேலையை காப்பாற்றிக் கொள்ள வேண்டும். தயவு செய்து இங்கிருந்து போய்விடும் பெரியவரே."

முன்னையை விட இரக்கத்துடனும் கருணையுடனும் பேசிய இராணுவ வீரனைப் பற்றி சாதிரிஸுக்கு கவலை உண்டானது. அவனுக்கு அதைவிட கவலை தனது பிள்ளை குட்டிகளைப்பற்றி நினைக்கும்போது உண்டானது.

'அப்படியென்றால் இன்றும் பிள்ளை குட்டிகள் பட்டினிதான்.....' இவ்வாறு எண்ணிக்கொண்ட சாதிரிஸ் மனதுக்குள் வேதனையையும் வெம்பலையும் தாங்கிக்கொண்டு திரும்பி நடந்தான்.

முதல் நாள் இருந்த மழை மூட்டங்கள் கலைந்து அக்கினிக் கோளமாய் சூரியன் நட்டநடுவானில் நின்றான். ஈவிரக்கமில்லாமல் தன்னுடைய ஒளிக்கண்களை பூமி மீது பாய்ச்சினான். ஒரு மழை மேகம் கூட விண்ணில் காணப்படவில்லை. இரவில் கடும் குளிர் தாக்கியது பகலிலோ நேர்மாறாகப் பொறுக்கவே முடியாத வெப்பம் சகல ஜீவன்களையும் தாக்கிக்கொண்டிருந்தது. சாதிரிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றத்துக்குச் சென்ற பொழுது செடிகொடிகள் அனைத்தும் வாடி வதங்கி ஆகாயத்தை நோக்கி கரங்களை நீட்டி மழையை வேண்டிக் கொண்டிருந்தன. ஆயினும் எந்தவிதமான இரக்கத்தையும் செடிகொடிகளுக்குக் காட்டவில்லை.

அவன் திண்ணையை அடையும் போது பகல் ஒரு மணியாகி இருந்தது. ஜோஸப்பினும் மெகலினும் வராந்தாவில் இருந்தனர். கடும் பசியால் மற்றக் குழந்தைகள் எல்லாரும் மாமரத்தில் கிடந்த பிஞ்சு மாங்காய்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். எதுவுமே சொல்லாமல் வராந்தாவில் இருந்த சாதிரிஸ் மெகலினை ஏறெடுத்துப் பார்த்தான். சாதிரிஸின் சோகம் கப்பிய முகத்தைப் பார்த்த மெகலினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"வலையை எடுக்கவிடமாட்டேன் என்கிறார்கள். அப்படியென்றால் எப்படி இந்தப் பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுக்கமுடியும்? மிகவும் அபாக்கியமான வேளையில்தான் இந்த வலையை விரித்திருக்கிறேன்."

"எல்லாத்துக்கும் அவசரப்பட்டு வேலை இல்லை. சாயங்காலம் ஆகும்போது எடுக்க விடுவாங்க. கொஞ்சம் பொறுமையாக இருந்து வேலையைச் செய்வோம். பிள்ளைகுட்டிகளுக்கு பசியாகத்தான் இருக்கு. அதுக்கு என்னதான் செய்ய முடியும்?"

'அவர்கள் பிசாசு மாதிரி. ஒரு வார்த்தை பேச முடியாது. எப்படி வலையை எடுக்க முடியும்? இருட்டுப்பட்டுப்போய் எடுத்து என்ன பிரயோசனம்? கருவாட்டுக்கு கொடுப்பதென்றால் கொஞ்சம் நேரங்காலத்தோடு கொடுக்கவேணும்.'

சாதிரிஸின் வேதனை தணியவில்லை. அடுத்தடுத்து வந்த பிரச்சனையினால் அவன் பொறுமை இழந்திருந்தான். தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்நாளில் இன்றுபோல் ஒரு சிக்கலுக்கு ஒரு நாளும் அவன் முகங்கொடுத்ததில்லை என்பதை உணர்ந்தான். அவன் பிள்ளைகளைப் பார்த்தபடி கேட்டான்.

"பிள்ளைகள் என்ன சாப்பிட்டார்கள்?"

"வங்கி ஐயா மரவள்ளிக்கிழங்கும் வத்தாளையும் கொடுத்தார்கள். காசும் வேண்டாம் என்றார். நான் அதை அவித்து கொஞ்சம் உப்பு தெளித்து கொடுத்தேன். என்னதான் செய்வது?"

"பிள்ளைகளுக்கு மரவள்ளிக்கிழங்கு சாப்பிட்டு 'ச்சீ' என்று போயிருக்கும். என்றைக்குத்தான் ஊரடங்குச் சட்டம் முடியுமோ தெரியாது. மேலும் நீடிப்பார்களோ தெரியாது நாளைக்காவது எடுத்துட்டாங்கன்னா நல்லது."

மெகலின் மௌனமாக சமையலறைக்குச் சென்று மரவள்ளிக் கிழங்கு கொஞ்சம் கொண்டு வந்து தரப் போனாள். உப்புத் தெளித்த மரவள்ளிக்கிழங்கு சாதிரிஸுக்கு இரண்டு நாள் ஆகார மாகிப்போய்விட்டது. காலையும் பகலும் ஒன்றுமே சாப்பிடாததால் சாதிரிஸுக்கு தாங்கிக் கொள்ள முடியாத கடும் பசி உண்டாகியிருந்தது. அவனுடைய மனசுக்குள் கோபமும் கவலையும் நிரம்பி இருந்தபடியால் அவனுக்கு ஒன்றுமே சாப்பிட மனம் தரவில்லை.

அடுத்தகணமே சமையலறையிலிருந்து வராந்தைக்கு வந்த மெகலினுடைய முகத்தைப் பார்த்தான். அவளுடைய சோக மயமான முகத்தையும் கையிலிருந்த மரவள்ளிக் கிழங்குத் தட்டையும் பார்த்த சாதிரிஸுக்கு சற்று நேரத்துக்கெல்லாம் கோபம் மறைந்துவிட்டது. எந்தவிதமான பேச்சுமூச்சுமில்லாமல், கட்டி கட்டியாகச் சேற்றை முதலை விழுங்குவதைப் போல மரவள்ளிக் கிழங்கை விழுங்கினான்.

UNIVERSITY OF PERADENIYA
17 - 2 - 1996
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு அமைதியாக இருந்தது. அமைதியைக் கலைத்துக் கொண்டு கேட்கும் குண்டுச் சத்தமும் வெடிச் சத்தமும் அவன் காதில் விழுந்தன. மிச்சம் மீதமாயிருந்த வத்தாளைக் கிழங்கைச் சாப்பிட்டுவிட்டு இரவு படுக்கைக்குப் போன பிள்ளைகுட்டிகள் அனைவரையும் அவன் நினைத்துப் பார்த்தான்.

"ஜோஸப்பினா........மக, ஜோஸப்பினா உங்க அம்மாவைக் கொஞ்சம் கூப்பிடுங்க."

அவனுடைய வார்த்தைகளில் சந்தோஷமான நிலைமை காணப்பட்டது. பகல் முழுவதும் இருந்த கோபமும் சோகமும் அவனிடமிருந்து விடை பெற்றிருந்தது. மெகலின் ஜோஸப்பின் தன்னைக் கூப்பிடும் வரை காத்திருக்கவில்லை.

"நீங்க கூப்பிட்டிங்களா?"

"நாளைக் காலை ஐந்து மணிக்கு ஊரடங்குச் சட்டம் முடிந்து விடுமாமே.?"

"யார் சொன்னது?"

"இப்போ ரேடியோவில் சொன்னாங்களாம்"

"கடவுள் கண்ணைத் திறந்து பார்த்திட்டார்"

"மேல வீட்டு பியதாஸ இப்போ சொன்னார்"

"ஆ அப்படியா?"

"காலையிலே போய் வலையை எடுக்கமுடியும். நாளைக்காவது அரிசியும் மசாலாத்தூளும் கொஞ்சம் எடுக்க மீன் அகப்பட்டிருந்தால் போதும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்நாள் இரவு இருந்த குளிர்த்தன்மை மறைந்து வெப்பம் நிலவியது. இரவு முழுவதும் உடல் நனைந்து போகும் அளவுக்கு வியர்வை வழிந்து மழை முகில்கள் மிதந்து சென்றாலும், ஒரு துளி மழை கூட விழவில்லை. இரவு அமைதியாக இருந்தாலும் சாதிரிஸ் உள்ளம் அமைதியாகக் காணப்படவில்லை. சிலவேளை அவனுடைய உள்ளம் பூதாகாரமான நினைவுகளுக்குள்ளாக்கப்பட்டது. குண்டு சத்தம் இடைக்கிடையே கேட்கும் பொழுது ஊரடங்கு சட்டம் நீடிக்கப்பட்டுவிடுமோ என்று சாதிரிஸ் உள்ளம் நினைத்தது. இது சதா அவனுடைய உள்ளத்தை ஆட்டிப்படைத்தது.

இரவு முழுவதும் ஏதேதோ எண்ணங்கள் சாதிரிஸின் மனதில் அல்லாடினாலும் சாமநேரம் மூன்று மணியளவில் அவனை நித்திராதேவி அணைத்துக்கொண்டாள்.

மீன் வலையைக் கரை சேர்ப்பதற்கான எண்ணம் குடி கொண்டிருந்தபடியினால் அதிக நேரம் நித்திரைவிட்டு வைக்கவில்லை. விரைவில் படகுக்குச் சென்று ஏறியதும் சடுதியில் மிகவும் ஆனந்தத்தோடு வலையைக் கரைசேர்ப்பதற்கு நினைத்தான். அலைகளும் வாவியில் மோதவில்லை. மீன் வலையைத் தூக்குவதற்கு அவனால் முடியவில்லை. மீன்கள் எக்கச்சக்கமாக அகப்பட்டிருந்தன. அவன் தாங்க முடியாத சந்தோஷத்தில் மெகலினைக் கூப்பிட்டான்.

"மெகலின் . . . . . மெகலின் . . . . . . "

மெகலின் தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்தாள்.

"என்னங்க இன்னைக்குத் தூக்கத்தில் கத்துறீங்க. கனவு கண்டீங்களா என்ன?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏய்..... ஏய்..... என்ன இது?" சாதிரிஸ் தூக்கத்திலிருந்து விடுபட்டான். அவன் எழுந்தபோது சுற்றும்முற்றிலும் வெளிச்சம் பரவியிருந்தது.

"என்ன நீங்க கனவேதும் கண்டீங்களா?"

சாதிரிஸ் ஒன்றுமே பேசவில்லை பாயில் இருந்துகொண்டு கொஞ்சநேரம் யோசித்தான். அதன் பின்னர் சுற்றும் முற்றும் கண்ணோட்டம் விட்டபொழுது நன்றாக விடிந்துவிட்டதைக் கண்டான். வேறு நாட்களில் சாயத்தை ஒரு வாய் குடித்து விட்டுப் போகும் சாதிரிஸ் இன்று ஒன்றுமே குடிக்காமல் உடனடியாகப் புறப்பட்டான்.

முதல் நாள் காவல் காத்துக் கொண்டிருந்த இராணுவவீரர்கள் காணப்படவில்லை. சாதிரிஸின் உள்ளம் சந்தோஷத்தால் பூரித்துப் போயிருந்தது. சொல்லமுடியாத அளவுக்கு ஆனந்தத்தால் ஆட்கொள்ளப்பட்ட அவன் படகில் ஏறி துடுப்பெடுத்து வலையை நோக்கி வலிக்கத் தொடங்கினான். மிதப்பை ஒவ்வொன்றாக வேகமாகச் சேர்த்துக் கொண்டு தண்ணீரிலிருந்து அவன் இழுக்கத் தொடங்கினான்.

வலையைத் தூக்கி படகில் போட முயற்சித்தாலும் அதை அவனுக்கு சாத்தியமாக்க முடியவில்லை. அவன் தண்ணீருக்குள்ளேயே வலையை இழுத்துக் கொண்டு கரையை நோக்கி துடுப்பை வலித்தான். கரைக்கு வந்துவிட்ட சாதிரிஸ் வலையை இழுத்தான். இழுக்க முடியாத அளவுக்கு பாரமாக இருந்தது. அவன் மேலும் கஷ்டப்பட்டு இழுக்க முயன்றான். அவனால் அது முடியவில்லை. அவன் பிரார்த்தனையெல்லாம் பலித்து விட்டது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தான். அவன் உள்ளத்தில் குதூகலம் பொங்கிப் பிரவகித்தது. அவன் சிரமத்தைப் பாராமல் கூமா மரத்தில் வலையை இழுத்துக் கட்டிக் கொண்டான். தண்ணீர் மேலே வலை வந்துவிட்டதுதான் தாமதம் அவன் பூஜா மலர்கள் அனைத்தும் சிந்தி சிதறிப் போயின.

மீன்கள் ஊதிப் பொதுமிப்போய், இருந்ததோடு சில மீன்களில் துண்டுகள் மட்டுமே காணப்பட்டன. வலை முழுவதுமே இத்தகைய மீன்களே காணப்பட்டன. சாதிரிஸின் கண்கள் கொத்திக் குதறிப் போன மீன் துண்டுகளிலே பதிந்து விட்டது. மாத்திரமல்ல ஒளி மயமாய் பளபளத்துக் கொண்டிருந்த அழகே உருவான பளிங்கு மாளிகையை சம்மட்டியால் ஓங்கி ஒரே அடியில் சுக்கல் சுக்கலாக்கி நொறுக்கியது போல் அவனுக்குத் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்டில்

சோமரத்ன பாலசூரிய

சுற்றிவர முள்ளுக் கம்பிகளாலும், மணல் மூடைகளாலும் பாதுகாப்பு செய்யப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கு வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தவர் ஒரு பொலிஸ் சாரதியாகும். பொலிஸ் உடையை அணிந்து கொண்டு வண்டியை ஓட்டிக் கொண்டுவரும் அவரைக் கண்டவர்கள் எவரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு பயத்தினால் வேறுபுறம் திரும்பிக் கொண்டனர். துப்பாக்கியைத் தாங்கிக் கொண்டு காவலுக்கு நின்ற பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு 'குபீர்' என்று சிரிப்பு வந்து விட்டது. பொலிஸ் சீருடை அணிந்திருந்தபடியாலேயே அவர் மௌனமாக தலையைக் குனிந்த வண்ணம் வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றார். அவர் மாட்டை அவிழ்த்து வண்டிச் சில்லில் கட்டிவிட்டு பொலிஸ் நிலையத்தை நோக்கி வரும்பொழுது வண்டிக்காரனிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த வண்டிக்காரன்தானா என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அந்த சாரதி சற்று நேரம் வண்டிக்காரனையும் இன்னும் சொற்பநேரம் வண்டியையும் மாட்டையும் ஏறெடுத்துப் பார்த்து 'இவன்தானா' என்று நிச்சயப்படுத்திக் கொள்ள முடியாமலிருந்தார்.

"பெயர்"

"ரணசிங்க"

"வயது"

"நாற்பத்தினாலு"

"தொழில்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வண்டித் தொழில்"

"கல்யாணம் முடித்தவரா"

"இல்லை"

"வசிப்பிடம்"

"வண்டியில்"

"பிறந்தது எங்கே என்றுதான் நான் கேட்கிறேன்."

"பிறந்தது திவுல்லேவ வசிப்பது வண்டியில்."

"நீர் படித்திருக்கிறீரா?"

"ஆம்"

"எத்தனையாம் வகுப்பு"

"சிரேஷ்ட தராதரம் பாஸ்."

பொலிஸ் உத்தியோகஸ்தன் சற்று ஓய்வெடுத்தான். சந்தேகப் பேர்வழிக்குத் தெரியாமலேயே உச்சிமுதல் உள்ளங்கால்வரை அடர்த்தியாகவும், கருப்பாகவும் வளர்ந்து சுருண்டிருந்த தலைமுடியையும், தாடியையும், இடைக்கிடையே நரைத்திருந்த மயிரையும் வெற்றிலை சாப்பிட்டதனால் காவிப்பிடித்து தேய்ந்து போயிருந்த பற்களையும் பார்த்துக் கொண்டிருந்தான். உள்வாங்கியிருந்த கூர்மையான சிறிய கண்கள் தன்னுடைய பொலிஸ் உத்தியோக குறிப்பை நோக்கி படிந்திருந்ததை அவன் கண்டான்.

"நீர் அந்தக் காலத்தில் அவ்வளவுக்குப் படித்திருந்தும் ஏன் வேலைக்குப் போகவில்லை."

"ஏன் நான்தான்வேலை செய்கிறேனே?"

"படிப்புக்கு ஏற்ற உத்தியோகத்தைப் பற்றிதான் நான் கேட்கிறேன்?"



470307
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியென்று ஒன்று இருக்கின்றதா?"

இப்படியான ஒரு பதிலை அவனிடமிருந்து எதிர்பார்த்த பொலிஸ் உத்தியோகஸ்தன் இரு விரல்களுக்கிடையே இருந்த பேனாவையோடேயே அவனுடைய கன்னத்தில் இரண்டு அறைகள் விட்டான். பொலிஸ் உத்தியோகஸ்தன் அடிகளை பொறுமையுடன் வாங்கிக் கொண்ட வண்டிக்காரன் அதுபற்றி எதுவுமே அலட்டிக்கொள்ளவில்லை. எந்தவிதமான உணர்ச்சிகளும் அவனிடமிருந்து வெளிப்படவில்லை. அவனின் உள்வாங்கிய விழிக் கோலங்கள் உணர்ச்சியில்லாமல் பொலிஸ் உத்தியோகஸ்தனுடைய குறிப்பை நோக்கியே நிலைத்திருந்தது. தன்னுடைய கையிலிருந்து தவறிவிழுந்த போல்பொயின்ட் பேனாவை அவன் பொறுக்கித் தருவான் என்று பொலிஸ் உத்தியோஸ்த்தன் நினைத்தான். கொஞ்ச நேரம் பார்த்துவிட்டு ஆவேசம் வந்தவனைபோல் எழுந்து நின்ற பொலிஸ் உத்தியோகஸ்தன் இரண்டு கைகளாலும் வண்டிக்காரன் தலை மயிரைப் பிடித்து பல தடவை ஆட்டி நிறுத்தி வைத்தான்.

"நல்லா புரிந்துக் கொள். கேட்பதற்கு மட்டும் பதில் சொல் சும்மா பண்டிதனாகக் கதைத்துவிட்டு படிப்பைக் காட்டி சாகாதே. நீ எங்கே இருக்கிறாய் என்று நல்லா நினைத்துக் கொள்."

வண்டிக்காரன் அதொன்றும் கேளாதவன்போல் இருந்தான். அதேவேளை பொலிஸ் உத்தியோகஸ்தன் ஏதோஒரு காரணத்திற்காகப் போவதுபோல் நடந்து வீசப்பட்டிருந்த பேனாவை பொறுக்கிக் கொண்டு திரும்பவும் தன்னுடைய ஆசனத்தில் வந்து சரியாக அமர்ந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கேள்வி என்னவென்று அவன் சொற்ப நேரம் யோசித்தான். இத்தகைய கேள்விகள் கேட்டு பழக்கமில்லாத படியாலும் பல்வேறு சந்தேகப் பேர்வழிகளிடம் அடுக்கடுக்காக கேட்கும் கேள்விகளுக்கும், அவர்கள் கொடுக்கும் மறுமொழிக்கும் எதிர்மாறாக இந்த வண்டிக்காரனிடம் தான் கேட்கும் கேள்விக்கும் அதற்கு அவன் கூறும் பதில்களும் வித்தியாசமாக இருப்பது அவனுக்கு சிறிது அதிர்ச்சியையும், அதேசமயம், கோப உணர்வையும் ஏற்படுத்தியிருந்தது. அவன் அடுத்த கேள்வியைக் கேட்பதற்கு வண்டிக்காரன் முகத்தைப் பார்த்தான். தலைமயிரை பிடித்திழுத்ததால் கலைந்துபோன சுருண்ட நீண்ட மயிர் பொம்மிப்போய் ஆறடி உயரமான அவனை இன்னும் உயரமானவனாக எடுத்துக் காட்டி நின்றது. அவனுடைய பரந்த தோள்களும், அங்கொன்றும், இங்கொன்றுமாக நரைத்து வளர்ந்திருந்த தாடியும் தன்னையே பார்த்திருந்த கூர்மையான கண்ணும் முழங்கால்வரை நீண்டிருந்த மெலிந்த நீண்ட கரங்களும் பொலிஸ் உத்தியோகஸ்தனின் மனதில் பீதியை உருவாக்கியது.

தன்னிடமிருந்து 'போல்பொயிண்ட்' பேனாவை புத்தகத்தின் நடுவில் வைத்து புத்தகத்தை மூடிய பொலிஸ் உத்தியோகஸ்தன் அவனைப் பார்க்காமலே அப்பால் போனான். வண்டிக்காரன் நின்றபடியே நின்று கொண்டிருந்தான். பொலிஸ் கட்டிடத்தின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்ட ஒரு ஜீப் வண்டியும், அதற்கும் கொஞ்சம் தள்ளியிருந்த வண்டியும் சில்லில் கட்டப்பட்டிருந்த மாடும் அந்த மாட்டின் வாயிலிருந்து தள்ளிக் கொண்டிருந்த நுரையும் அவன் கண்களுக்குப்பட்டன. கண நேரத்தில் அந்த உருவங்கள் கரைந்து போவதைபோல் அவனுக்குத் தெரிந்தது. முண்டாசு கட்டிக் கொண்ட மனிதர்கள் வெகு வேகமான நடையில் பொலிஸ் நிலையத்தைப் பார்த்தும் பாராமலும் குனிந்தபடி முன்நோக்கி நடக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய உத்தியோகம் எனக்குப் பொருத்தமானது மற்றவர்களுக்கு பொருத்தமில்லாததுபோல் படுகிறது. படிப்புக்கு ஏற்ற உத்தியோகம் யாராவது செய்கிறார்களா? ஆங்கில மொழியும் இலக்கியமும் உட்பட, நான் சிரேஷ்ட தராதரப் பத்திரத்தில் நன்றாக சித்தியடைந்துள்ளேன். தமிழ் முதலாளிகளிடம் நான் தமிழில்தான் பேசுவேன். என்னுடன் படித்த குணரத்ன அன்று பிலிம் பெயர் சஞ்சிகையில் வெளிவந்த நர்கிஸ் போன்ற அழகான நடிகைகளின் படங்களை வெட்டி ஒட்டிக் கொண்டிருந்தவன், இன்று அமெரிக்க பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறான். டிமை பேப்பரில் நாள் முழுதும் தூயகணிதம் பயிற்சி செய்த நான் இன்று வண்டி ஓட்டுகிறேன். அவர்கள் அந்தந்த இடத்திற்கு எப்படி போனார்கள் என்றுதான் கேள்வி கேட்க வேண்டுமே தவிர என்னுடைய தொழில் பொருத்தமானதல்ல என்பதல்ல.

"ஆ . . . . இப்போது இரும். இருந்து நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லும்."

பொலிஸ் உத்தியோகஸ்தனின் முரட்டுக் குரலும் அவனுடைய தோற்றமும் இப்போது தளர்ந்துவிட்டதுபோல் அவனுக்குத் தெரிந்தது. மேசை மீதிருந்த தொப்பியை அவன் அணிந்தது ஏனென்று வண்டிக்காரனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அது அவனுடைய கடமை என்று அவன் நினைத்தான். வண்டிக்காரன் ஆசுவாசமாக மனசில் எந்தவித பயமுமில்லாமல் தன்னுடைய இடம்போல் கருதி வாங்கின்மேல் இருந்ததையும் தன்னுடைய இரு கைகளையும் அவன் மேசை மீது வைத்துக் கொண்டு முன்னால் தலை சாய்ந்த வண்ணம் இருந்ததையும் கண்ட பொலிஸ் உத்தியோகஸ்தனுக்கு அந்த வண்டிக்காரன் தன்னையே கேள்வி கேட்கப் போகிறானோ என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுக்குப் பட்டது. கைகளை மேசை மீதிருந்து எடுக்கும்படி கட்டளையிடும் மனோபாவம் அவனுக்கு ஏற்பட்டது. ஆனால் அவன் அப்படி செய்யவில்லை. கடைசியாகக் கேட்ட கேள்வி என்னவென்று அறிந்து கொள்வதற்கு மீண்டும் அவன் புத்தகத்தைப் புரட்டினான்.

"உன்னுடைய நெருங்கிய நண்பர்கள் யார்?"

"மாடும், நாயும்"

"அடப் பேயா நீ என்ன சொல்கிறாய்?"

"வண்டி இழுக்கும் மாடும், படங்கில் இருக்கும் நாயும்."

பொலிஸ் உத்தியோகஸ்தன் எழுந்து நின்றான். ஆறு, ஏழு அடி நீளமான மேசையை வளைய எட்டி நடந்து பாதி சுவருக்குப் பின்னால் சுற்றிவரும் பொழுது வண்டிக்காரன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். வண்டிக்காரனின் புறங்கை இரண்டும் பெரிய குறடு இடுக்கில் அகப்பட்டதுபோல் அவனுக்குப் பட்டது. அத்துடன் அவன் பாதி சுவருக்கு மேல் இழுபட்டு மண்டபத்துக்குள் போனான். அவன் எவ்வளவு தூரம் இழுபட்டுப் போனான் என்றால் சுவர் காறை பெயர்ந்து சிதறிக் கிடந்தது. அத்தோடு வட்டத்தின் நாலில் மூன்று ஒரு சுழற்சி சுழன்று அவனது வலது கையால் ஒரு மனிதனால் தாங்கவே முடியாத பலத்த அறையொன்றை வண்டிக்காரன் கன்னத்தில் ஓங்கி விட்டான். வண்டிக்காரன் அதை எதிர்பார்த்தே இருந்தான் இடுப்பின் வலியைப் பொறுத்துக் கொண்ட அவன் பின்பக்கம் ஒருபாகை குனிந்தபடி அவன் அறைந்த அறையை தவிர்த்துக் கொண்டான். பொலிஸ் உத்தியோகஸ்தனுக்கு அவன் வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் இரு கால்களும் பின்னிக் கொண்டு முழங்கால் குத்திட்டபடி கையை ஊன்றிக் கொண்ட அவன், கைகள் இடுக்கின்வழியாக வண்டிக்காரனைப் பார்த்தான். வண்டிக்காரன் தலையைத் திரும்பியபடி பின்னால் பார்த்த வண்ணமே வலது கையால் இடுப்பைத் தடவிக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் வாயால் விசிலடித்துக் கொண்டு கைகளிரண்டையும் தடவியபடி, ஏதோ காரணத்தை யொட்டி மண்டபத்தைப் பார்த்துவிட்டுப் போக வந்த இன்னொரு பொலிஸ்காரன் நடந்ததை மோப்பம் பிடித்தவனைப்போல் 'வேலையைக் கொடுக்கவா' என்று சொல்லிக் கொண்டு அவன் வண்டிக்காரனுடைய கையை முறுக்கிச் சுழற்றி வெகுதூரத்திற்குத் தள்ளி விட்டான். அத்தோடு பழையநிலையில் மீண்டும் எழுந்து ஆயத்தமாக இருந்த பொலிஸ் உத்தியோகஸ்தன் அவனுடைய விலாப்புறத்தை நோக்கி காலால் எட்டி உதைத்தான். வண்டிக்காரன் பின்னால் உந்தப்பட்டுப் போக அடுத்த பொலிஸ் உத்தியோகஸ்தன் முன்குனிந்து கையைத் தட்டி குதித்து எழுந்து முகத்தில் அறை விட்டான். வெயிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் கறுத்துப்போய், பதமான ஓரளவு வற்றிப்போன அவனது கன்னங்கள் வெடிக்குமளவுக்கு வீங்கின. வண்டிக்காரன் தனது வலது கை நடுவிரலால் கன்னத்தை பட்டும்படாமலும் தடவிப் பார்க்கும்பொழுதே அவன் அடிவயிற்றில் விழுந்த கால் உதையினால் ஒரு மரம் அடியற்று விழுவதுபோல் விழுந்தான்.

அவனுக்கு உணர்வு வந்து விழித்தபோது அவன் சிறைக் கூண்டுக்குள் இருந்தான். பொறுக்கமுடியாத அளவு சிறுநீர் கழிக்க வேண்டியும், விலா எலும்புகள் நொறுங்கியதுபோது ஏற்படும் வேதனையும் தண்ணீர் தாகமும் அவனுக்கு உண்டானது. ஏதோ ஒரு காரணத்தினால் கண்ணில் நீர் திரைக்கட்டிக் கொண்டது. அவன் மிக சிரமத்தோடு குனிந்து தன் இரு கண்களையும், நெற்றியையும் துடைத்துக் கொண்டான். இடைக்கிடையே புறப்படும், வரும் ஜீப் இரைச்சல்களும் சப்பாத்து ஓசைகளும் பின்னர் யாரோ ஒருவர் விசில் ஊதும் சத்தமும். அதன் பின்னர் அமைதியான நிலையும் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடும், நாயும், வண்டியும் அவன் நினைவுக்கு வந்தது. அவன் மெதுவாக காலை ஊன்றி கூண்டிலிருக்கும் கம்பிகளைப் பிடித்தபடி அண்ணாந்து அரைச் சுவருக்கு மேலாக பொலிஸ் மேசைக்கு அப்பால் வீதியைப் பார்த்தான். மாடு காலைதூக்கிய வண்ணம் முன்னர் இருந்தபடியே எங்கோ பார்த்துக் கொண்டிருந்தது. வண்டியின் நுகத்தடி கீழே வைக்கப்பட்டிருந்ததனால் வண்டி மிகவும் ஏற்றத்தோடு இருந்தது என்பதை உணர்ந்து கொண்டான். நுகத்தடி உடைந்து போய் விட்டதோ என்று அவனுக்கு ஒரு யோசனை உண்டானது. போட்டிகோவிலிருந்த தூண் வண்டியை மறைத்தபடியால் வண்டி இரண்டாகி விட்டதுபோன்ற தோற்றம் தருவதை கடைசியாக தீர்மானித்தான். இப்படி தொடர்ந்து சில தினங்கள் கடந்து போனால் நுகத்தடியை கறையான் அரித்துவிடும். எந்த நேரத்திலாவது கேள்விகேட்க கூப்பிட்டால் தன் மாட்டுக்கும், நாய்க்கும் சாப்பாடும், தண்ணீரும் கொடுக்கும்படி கூறவேண்டும். நாய் படங்கில் படுத்துக்கிடக்கும் என்று இறுதியாக யோசித்தான்.

ஆனாலும் மாலைப் பொழுதில் அவனை யாருமே விசாரணைக்கு உட்படுத்தவில்லை. அடிக்கடி ஜீப் வண்டியில் கொண்டு வருபவர்கள் வரவர கூடுதலாக இருந்தது. வந்து சரணடைந்தவர்களும் இருந்தார்கள். அவனிருந்த கூண்டுக்குள் இன்னும் இரண்டு பேரை உள்ளே போட்டார்கள். அவர்களை உள்ளே தள்ளிவிட்ட பொலிஸ் உத்தியோகஸ்தன் அவனை ஏறெடுத்துப் பார்க்காமலேயே சிறைக் கூண்டை மூடிவிட்டுப் போனான்.

அந்திப்பொழுதில் அவனை ஓ. ஐ. சி. யின் அறைக்குள் அழைத்துச் சென்றார்கள். அவனுடன் இன்னும் ஒருவர் சிவில் உடையுடன் நின்றார். இரண்டு பேரும் அவனைப் பற்றித் தெரிந்த விபரங்களை ஆங்கிலத்தில் சுருக்கமாக்கிகொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர். வண்டிக்காரன் மாட்டுக்கும், நாய்க்கும் சாப்பாடும், தண்ணீரும் கொடுக்க வேண்டும் என்று கூறிக் கொண்டான். ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தரை அழைத்து மிருகங்களுக்கு சாப்பாடும், தண்ணீரும் கொடுக்க வேண்டுமென உத்தரவிட்டனர்.

"மாட்டுக்கும், நாய்க்கும் தின்னவும், தண்ணீரும்கொடுக்கும் நிலையும் எங்களுக்கல்லவா ஏற்பட்டிருக்கிறது." அப்பால் போகும் பொலிஸ் உத்தியோகஸ்தர் சொல்வது காதில் விழுந்தாலும் அதைக் கணக்கில் எடுக்காமல் இருந்தார்கள்.

"நீர் அன்று பயங்கரவாதிகளுக்கு சாப்பாடு சமைத்துக் கொடுத்தீரா?"

"நான் சில பேருக்கு சாப்பாடு சமைத்துக் கொடுத்தேன். அவர்கள் பயங்கரவாதிகளா இல்லையா என்று எனக்குத் தெரியாது."

"ஏன் சமைத்துக் கொடுக்க நினைவு வந்தது?"

"நான் பின்னேரம் சமைக்க ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். அவர்களுக்கும் சாப்பாடு சமைத்துத் தர வேண்டும் என்று கேட்டார்கள். என்னிடம் இருந்த தட்டுமுட்டு சாமான்கள் எல்லாம் சிறியவை. அவர்கள் பெரிய தட்டு முட்டு சாமான்களைக் கொண்டு வந்திருந்தார்கள். நான் சமைத்தேன் அவர்களும் ஒத்தாசை செய்தார்கள்."

"அவர்கள் யார் என்று முன்பே தெரிந்திருக்கவில்லையா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை"

"முன்பு தெரியாதவர்களுக்கு சாப்பாடு சமைத்துக் கொடுக்கும் பழக்கம் உண்டா?"

"பசியால் இருப்பவர்கள் என்றால் மனிதர்களுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்கும் கூட இருக்கும் அளவு சாப்பாடு கொடுப்பேன்."

"அது உன்னுடைய வீடு இல்லைத்தானே?"

"எனக்கு வீடு இல்லை. ஏழு நாட்களும் ஏழு இடங்களில் கழிந்து போகும். பின்னேரம் ஒரு சந்தையில் சாமான்களை இறக்கிவிட்டு, மறுநாள் அந்த சந்தை முடிந்த பிறகு சாமான்களையெல்லாம் சேர்த்துக் கொண்டு மற்ற சந்தைக்குக் கொண்டு போவேன்."

"சாப்பாடு சமைக்க உன்னையே தேடிக் கொண்டு வந்தது?"

"அது எனக்குத் தெரியாது. நான் சனிக்கிழமை ஓடை பக்கம் போவேன். மாட்டை நன்றாகக் குளிப்பாட்டுவேன். நாயையும் குளிப்பாட்டுவேன். அங்கு நல்ல நிழல். ஒரு வீட்டைவிட சுகமாக இருக்கும். அன்றுதான் நான் வண்டி சில்லுகளுக்கு எண்ணெய் போடுவேன். என்னுடைய மாட்டின் கொம்புகளுக்கும், நெற்றிக்கும் வேப்பெண்ணை பூசுவேன், ஈக்கள் மொய்க்காமல் இருக்க. அப்போது எனக்கு நன்றாகப் பசிவரும். தனிமனிதனுக்கு சமைப்பது ஒரு சோம்பேறித் தனமான வேலை. அதுவும் கதைத்துக் கதைத்துச் சமைத்தால் சிரமம் தெரியாது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரோடு பேசுவாய்"

"மாட்டோடும், நாயோடும்."

"என்ன மொழியில்?"

"நேரத்திற்கு ஏற்றதுபோல வாய்க்கு வந்தபடி எந்த மொழியிலும் பேசுவேன். எங்களைப் போல அவைகளுக்கு மொழி தேவையில்லை. அவைகளுக்குப் பேசும் முறையில் புரியும். குளிக்கச்செல்லும்போது நாய்க்குத் தெரியும். ஆனாலும் ஒரேயடியாகத் தாவிச் சென்று ஓடையில் குளிக்காது. அதற்குக் குளிக்கச் சொல்லும்போது அது வேறுபுறமாக ஓடிச் செல்லும். அப்போது தூஷணத்தால் பேச வேண்டும். ஒருதரம் அதட்ட வேண்டும். அப்போது ஓடிப்போய் ஓடைக்குள் பாயும். மாடும் அப்படித்தான்.

"ஓ சும்மா இருக்கும்போது புத்தகம் ஏதாவது வாசிப்பீர்தானே?"

"பிரயோசனம் இல்லை. ஒரு பிரயோசனமும் இல்லை. ஏதாவது பேப்பர் துண்டுகளைப் பொறுக்கிகொண்டால் வாசிப்பேன்".

"அரசியல் கட்டுரைகள் இருந்தால்?"

"இல்லை, எழுத்து மறந்து போகாமலிருக்க"

அவனைப் பார்க்கும்போது மடையனைப்போலத் தெரியவில்லை. அடையாள அணிவகுப்பு வைப்பது நல்லதென்று அவர்கள் ஆங்கிலத்தில் கதைத்துக் கொண்டார்கள்.

"நீர் எவ்வளவுவரை படித்திருக்கிறீர்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட தராதரம் சித்தியடைந்தவன் என்றும் தான் ஆங்கில மொழிமூலம் படித்தவனென்றும், தமிழ் பேசுவதற்கு முடியும். ஆயினும் எழுதுவதற்கு எழுத்தெல்லாம் மறந்து போய்விட்டதென்றும் கவனமாக தெரிந்தெடுத்த வார்த்தைகளால் பழகும் மொழியில் ஆங்கிலத்தில் சொன்னான். சிறிது காலம் பேசாதபடியாலும் வெற்றிலைப் போட்ட நாக்குத் தடித்தபடியாலும் வாயில் வார்த்தை தட்டுத் தடுமாறி சிதறியதுபோல் அவனுக்குத் தெரிந்தது.

அதே வேளை ஒரு அமைதியும் உண்டானது. திகைத்துப் போன அந்த உத்தியோகஸ்தர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்காமல் கதிரையில் மௌனமாக இருந்தனர்.

சிறிது நேரத்தின் பின் பெருமூச்சுவிட்ட சிவில் உடையிலிருந்த அதிகாரி அடையாள அணிவகுப்பு வைத்து முடித்து விடுவோமா என்று சிங்களத்தில் கேட்டார்.

பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் ஐந்தாறு இளைஞர்களை வரிசையாக நிற்பாட்டி வைத்தார். அவர்களுக்குள் தாடிக்காரர்கள், மீசை அரும்பாதவர்களும் இருந்தனர். ஆனாலும் இவர்களுக்கு இரண்டு பொதுத் தன்மை இருந்தன. அதில் ஒன்று புருவம், மூக்கு உதடு வீங்கி இரத்தம் கசிந்து விகாரமாக இருந்தது. மற்றது ஒருவருக்கும் பாரிய உடம்பு இருக்கவில்லை.

"அன்று சாப்பாடு சாப்பிட்ட யாராவது இங்கு இருக்கிறீர்களா?"

அவன் சற்றுநேரம் முகங்களை கவனித்துப்பார்த்தான் இருந்தாலும் சொல்ல வேண்டுமா என்ன? அடுத்து மற்றவர்களைப்



UNIVERSITY ... PERADENIYA
17-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி அக்கறையோடு பார்ப்பதும் அவர்களைக் கவனிப்பதும் அவனுக்கு ஒரு பழக்கமான விசயமல்ல. ஆரம்ப விசயங்களையும் முடிவான விசயங்களையும் கேட்பது இவனுடைய பழக்கமுமல்ல. அவனுக்கு எல்லோரும் ஒன்றுதான்.

"அப்படியென்றால் ஒருவரையும் தெரியாது? அவனை உள்ளே போடு."

பொலிஸ் உத்தியோகஸ்தர் அவனை இழுத்துக் கொண்டு போய் சிறைக் கூண்டுக்குள் தள்ளிவிட்டான் கூண்டின் ஒரு மூலையில் சாய்ந்து கொண்டிருந்த முகம் வீங்கி கருத்துப் போயிருந்த இருவரும் திடுக்கிட்டு எழும்புவதற்கு முயன்று மீண்டும் நித்திரையானார்கள். சிறுநீர்கடுப்பும், நெஞ்சும், விலாப்புற வேதனையும் எவ்வளவு தூரம் இருக்கிறதென்றால் மயங்கி விடுவோமோ என்று அவன் நினைத்தான். இரவில் அடிக்க கேட்ட புலம்பலும், சத்தங்களும், வெடி சத்தங்களும் நித்திரைக்கு ஒரு தடையாக இருந்தன. ஒரிரு நாட்கள் கழிந்து போக தாகம், பசி, நெடி, புலம்பல், தூசணங்கள் பழகி ஏற்கத் தக்கதாக இருந்தது.

ஆனாலும் தாங்க முடியாத துர்நாற்றம்தான். இதையெல்லாம் மறந்து நல்லதொன்றை நினைப்பதற்கு இருந்தால் எவ்வளவோ இதமாக இருக்கும்?

நான் இங்கு சிறுநீர் கழித்தாலும் என்னுடைய நாய் வெகுதூரம் போய்விட்டு என்னைப் பார்த்தது, தவறில்லை என்று நினைத்ததன் பின் தான் சிறுநீர் கழிக்கும். என்னுடைய மாடு தண்ணீரில் சிறுநீர் கழிப்பதோ சாணம் போடுவதோ இல்லை. குளிப்பதற்கு முன்பு அது அந்த இரண்டு காரியங்களையும் செய்யும். கடந்த நாட்களிலே நான் ஒரு மனமுடனேயே வாழ்ந்தேன். எதைப் பற்றியும், தீவிரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசிப்பதற்கோ, தவறைப் பற்றி யோசிப்பதற்கோ முனைவதில்லை. ஒரு கிழமைக்கு ஒரு தடவை கடந்து போகும் வயல் வெளிகள், பாலங்கள் , வடிகால்கள், சேற்றுக் கிடங்குகளில் கிடக்கும் எருமை மாடுகள், வயல் வெளி மீதாகப் பறந்தோடும் கொக்குகள், கிளிகள் தேக்குமரத் தோட்டங்களில் சாம்பல் நிறமான மேகங்களை தழுவும் மலை, மழை, வெயில் என்னுடைய உலகமாகும். மாடும், நாயுமே என் நண்பர்களாகும். நான் அதிகமாக மாட்டோடுதான் கதைத்துள்ளேன். நான் அதற்கு பாட்டுகள் படிப்பேன்

இந்த எண்ணங்களுக்குள் அவனுக்கு மாட்டின் நினைவு வந்து விட்டது. அதன் கொம்பிலிருக்கும் பித்தளைப் பூணை பளபளக்கத் தேய்க்க வேண்டும் என்றும், தேய்ந்து போன லாடத்தை அடிக்க வேண்டும் என்றும் யோசித்தான். லாடம் அடிப்பதற்கு மாட்டைப் புரட்டிப் போட்டு வதையும் கொடுக்க வேண்டும். லாடம் அடிக்கா விட்டால் வழுக்கி கால்கள் உடைந்துவிடும். இந்த இரண்டுகிரியைகளிலிருந்தும் விடைபெறுவதற்கு எங்களுக்குமே முடியாது. அடிமட்டம்வரை தேய்ந்துப் போவதைப் பார்த்துக் கொண்டிருப்பதை விட லாடம் அடிப்பதைவிட வேறொன்றும் செய்வதற்கில்லை.

அன்று பகல் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் வந்து கூண்டுக்குள்ளிருந்து வெளியில் எடுத்தார்.

"ஏன்டா உன்னுடைய ஊரெது?"

ஒரு தடவை என்னுடைய வசிப்பிடத்தை தெரிந்து சொல்லப் போய் என் விலா எலும்பை உடைத்தார்கள். வசிப்பிடம் வண்டியில் என்றும் பிறந்த இடம் திவுல்லேவ என்றும் புத்தகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியப்பட்டுள்ளது. இப்பொழுது வசிப்பிடம் எங்கே என்று மீண்டும் கேட்கிறார்கள். தேவையான விடயத்தைத் தெரிந்து கொள்வதற்கு யாரும் எவரும் எதையும் கேட்பார்கள். அதற்கு அப்பாற்பட்ட உண்மைகள் அவர்களுக்கு சந்தோசத்தைத் தரக் கூடியதல்ல.

"சொல்லுடா உன் ஊரை"

"திவுல்லேவ ஐயா. என்னுடைய மாடு?" ..........

"அட மாடு மாட்டைப் பார்க்க உனக்கு நேரமிருக்கு எங்களுக்கு இல்லை உனக்குத் தெரிந்த இரண்டு பேருடைய பெயர்களைச் சொல்லு"

"அண்ணே ...... மிஸ்டர் குணசிங்க .... ?"

"வேற யார், கிராமசேகர்?"

"கிராம சேவகர் யாரென்று தெரியாது. பழைய விதானையாரைத் தெரியும்."

ஜீப் வண்டியின் பின் புறத்தில் அவனைப் போட்டுக் கொண்டார்கள். அவனிடம் கேள்வி கேட்ட உத்தியோகஸ்தர் இரண்டு பேரும் முன்னால் இருந்தார்கள். அவன் பக்கத்தில் ஆயுதத்தோடு ஒரு பொலிஸ்காரன் இருந்தான். வண்டிக்காரனுடைய வழிகாட்டலில் மரஞ் செடிகள், காடுகள், பிளவுகள், கடந்து போய்க் கொண்டிருந்தன.

ஜீப் வண்டி அண்ணனுடைய வீட்டு முற்றத்தில் போய் நின்றது. அண்ணன் வெற்றிலையில் பாதியை சப்பிக் கொண்டு ஜீப்பை நோக்கி முன்னால் வந்தான். அவன் எந்தவிதமான சலனமும் இல்லாமல் தம்பியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரிது?"

"தம்பி"

"இவருடைய தட்டு முட்டு சாமான்கள், புத்தகங்கள் இங்கே இருக்கின்றனவா?"

"ஆம்"

அண்ணன் அவனுடைய தட்டு முட்டு சாமான்கள் நிறைத்து வைத்திருந்த பெரிய ட்ரங்கு பெட்டி ஒன்றை தூக்கிக் கொண்டு வந்து வெளியில் வைத்தான். அதை அவனைக் கொண்டே திறக்க வைத்தார்கள். அதை திறக்கும்போது வண்டிக்காரன் மனதுக்கு அவனது இளமைப் பருவம் நினைவுக்கு வந்தது. பாடசாலையில் படிக்கும்போது அவன் தங்கும் விடுதிக்கு இதே பெட்டியை எடுத்துக் கொண்டு போனான். அன்று அதனிலிருந்து வந்த புதிய உடை, புத்தகங்கள், சவர்க்காரம், பௌடர், ஒன்று கலந்து வந்த வாசம் இருக்கிறதா என்பதை சுவாசிப்பதற்கு மூக்குத் துவாரத்தை பெரிதாக்கி உறிஞ்சினான்.

புத்தகங்கள் ஒவ்வொன்றையும் அவர்கள் சோதனை செய்தார்கள். சிவப்பு மொனிட்டர் புத்தகக் கட்டும், ஆங்கில, சிங்கள புத்தகக் கட்டும், தமிழ் பாட்டுப் புத்தகங்களும் மேலே இருந்தன. பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒவ்வொன்றாகப் பரிசீலித்தார். அந்தப் புத்தகங்களில் இரண்டில் பின்புற அட்டையில் இரண்டு தாடி மீசைக்காரர்களின் புகைப் படத்தைக் கண்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் கைப்பற்றிக்கொண்டு தன்னுடைய சட்டைகளாலேயே தூசியைத் துடைத்துக் கொண்டு மேலதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளில் கொடுத்தான். அவை சேக்ஸ்பியருடைய மெய்பத்தும், தாகூருடைய படமும் ஆகும்.

"நீர் அந்தக் காலத்தில் ஒரு நாடகக்காரன் போலும்."

"அந்தக் காலத்தில் எங்களுடைய பாடப் புத்தகங்கள்தாம் அவை

அதற்குக் கீழ் கையால் கட்டப்பட்ட டிமைப் புத்தகம் இருந்தது. அது, அவன் கணக்குகள் செய்வதற்குப் பாவித்ததாகும். அதற்குக் கீழே 'அரச பணி' யென்று அச்சிட்ட ஒரு பெரிய தபாலுறை இருந்தது. அதற்குள் அவனுடைய விளையாட்டு சான்றிதழ்களும், சிரேஷ்ட தராதரப்பத்திரமும் இருந்தன. அதைக் கவனமாக எடுத்துக் கொண்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் இரண்டு தரம் தூசி போகத் தட்டி விட்டு ஓ.ஐ.சி.யிடம் கொடுத்தார். மண்ணிறமான அரக்குமுத்திரிகையைத் தவிர அனைத்தும் வெள்ளிப் பூச்சிகளால் அரிக்கப்பட்டிருந்தன.

"அக்காலத்திற்கு ஏற்றபடி அவனுக்கு நல்லதொரு உத்தியோகத்திற்கு போகும் வாய்ப்பிருந்தது "ஓ. ஐ. சி மற்ற உத்தியோகஸ்தருக்கு இரகசியமாகக் கூறுவதைப்போல் மெல்லியக் குரலில் ஆங்கிலத்தில் சொன்னார்.

"அதுதான் சேர்"

தங்களுக்கிடையே நடந்த பேச்சுவார்த்தைகளுக்கு மறுமொழி கொடுத்த கிராமத்தவருடைய பதிலுக்கு இரண்டு உத்தியோகஸ்தர்களும் ஆச்சரியப்பட்டார்கள்.

வெயிலில் காய்ந்து தேமல் பிடித்துப் போயிருந்த அவன் தோலும், வெற்றிலைச் சப்பி சிவந்து போயிருந்த உதடும், எண்ணெய் பூசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளபளக்கும் சாடையான வழுக்கைத் தலையும் உடைய வீட்டுக்காரன், எந்தவிதமான உணர்ச்சியும் இல்லாமலேயே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனாலும் அவனுடைய நாக்கு, கன்னத்துக்குள் சுழன்று சுழன்று அங்கு ஒரு மூலைக்குள் மிஞ்சியிருந்த பாக்குத் துண்டுகளைத் தேடி அவனுக்கு கட்டுப்படாமலே செயல்பட்டுக் கொண்டிருந்தது.

"நீர் என்ன செய்கிறீர்?"

"கமம் செய்கிறேன்."

வண்டிக்காரனை ஜீப் வண்டிக்குள் திரும்பவும் ஏற்றிக் கொண்டார்கள். அண்ணனும் தம்பியும் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளையும் பரிமாறிக் கொள்ளவில்லை.

புறப்பட்டுப் போகும் ஜீப் வண்டியை வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்த அண்ணன் "அவன் குற்றம் இழைப்பவனல்ல" என்று சொல்லிக் கொண்டு வீட்டுக்குள் போனான்.

மறுநாள் காலை ஆயுதப்பாணிகள் பலர் புறப்பட்டுப் போனார்கள். தனியார் வாகனங்களை எடுத்துக் கொண்டு சந்தேகப் பேர்வழிகளை வேறிடங்களுக்குக் கொண்டு சென்றார்கள். பகற்பொழுதாகும்பொழுது வேறு சிலர் வந்து சரணடைந்தார்கள். அவர்களுக்கு ஆளுக்கொரு உதை கொடுத்து 'லாக்கப்' பில் போட்டு விட்டார்கள்.

மாலைவரையும் ஒருவருக்குமே ஒரு துளி தண்ணீரும் கிடைக்கவில்லை. சாரம் அணிந்திருந்த சுயேச்சை உத்தியோகஸ்தர்கள் வந்ததுடன், அங்கிருந்த பாழடைந்த அமைதி கலைந்துப் போனது. அவர்கள் கட்டைச் சுவர் மீதிருந்து சிகரட் புகைத்துக் கொண்டு வம்பளந்துக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையே வந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் "முட்டாளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைக்கு விடுவிக்கச் சொன்னார்கள் இன்னும் கொஞ்ச நேரத்தில் இதையும் மறந்து விடுவோம்" என்று சொல்லிக் கொண்டு கூண்டின் கதவைத் திறந்தான்.

"இப்போ நீ எங்கேயும் தொலைந்து போ"

வண்டிக்காரன் மெதுவாக எழுந்து குந்திக் கொண்டான். முழங்கால் இரண்டில் கையை வைத்துக் கொண்டு எழும்பி நின்ற அவன், தெருவை ஏறெடுத்து சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். வண்டி இருந்த இடத்திலேயே சாய்ந்து போயிருந்தது.

"ஐயா மாடு"

"உன்னைவிட பெரிய மாடு எங்கே ஓய். இப்போதாவது உயிரைக் காப்பாற்றிக் கொண்டு போ, இன்னும் எங்களை வதைக்காமல் இன்னும் ஒரு மணித்தியாலயத்தில் ஊரடங்கு சட்டம் வந்துவிடும். இல்லாவிட்டால் நீ சாகத்தான் போகிறாய்."

சுயேச்சை உத்தியோகஸ்தர்கள் பல வகையில் கேலி செய்துக் கொண்டும், கதைகள் பேசிக் கொண்டும் சிகரட் புகைத்துக் கொண்டிருந்தார்கள். அவனுக்கு அதிலொன்றிலும் முன்னும், பின்னும் விளங்காமலும், கணக்கிலும் எடுக்கவில்லை. அவன் மாட்டைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். பொலிஸ் நிலையத்தின் பின்புறத்தில் மாடு புல்லைத் தின்று கொண்டு இடைக்கிடையே தலையைத்தூக்கித் தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் என்ற சிந்தனை அவனுக்கு உண்டானது. அத்தோடு, கடந்த சில நாட்களாக நொய்ந்து போயிருக்கும் என்ற கவலையும், ஆனாலும் இன்று திரும்பவும் பழைய நிலைக்கு வரலாம் என்ற எண்ணமும் தோன்றியது. வேதனைகள் அனைத்தையும் அடக்கிக் கொண்டு அவனுக்கு மகிழ்ச்சி ததும்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ போகப் போறியா? அல்லது மீண்டும் சிறைக் கூட்டுக்குள் போறியா?"

"நான் போக மாடு வேண்டும்"

"ஏன் உன்னைப் போன்ற மாட்டுக்கு வண்டியை இழுக்க முடியாதா?"

"என்னுடைய மாடு எனக்குத் தேவையென்றுதான் சொல்கிறேன்."

"நீ உன் மாட்டைத் தேடுகின்றாய். மனிதனுக்கே இந்த நிலை ஏற்படும்போது மாட்டுக்கு என்ன நிலை ஏற்படுமோ ஓய்."

சுயேச்சை உத்தியோகத்தர்கள் கைகொட்டி சிரிக்கத் தொடங்கினர். அவனுக்கு அதைக் கேட்பதோ அல்லது தெரிந்து கொள்வதோ அவசியமில்லை. வீங்கி கருத்துப் போயிருந்த விழிகள் மேலும் சிறுத்துப் போனதாகத் தோன்றியது. காலை எட்டி வைத்து பிராணியை வளைத்துக் கொள்வதைப்போல், பொலிஸ் உத்தியோகஸ்தரை நோக்கி நெருங்கினான். பொலிஸ்காரன் அவனைப் பார்த்தபடியே பின்னுக்குப் பின்னுக்குச் சென்று மேசை மீது வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கிப் பக்கம் பின் வாங்கினான். வண்டிக்காரனுடைய வலது கை மாயமாக நீண்டு பொலிஸ் உத்தியோகஸ்தனை இழுத்ததுபோல் பட்டது. பொலிஸ்காரனுடைய புறங் கையைப் பிடித்து சுழற்றி விடவே கட்டைச் சுவரின் கீழ் பொலிஸ்காரன் விழுந்து சாய்ந்தான். கட்டையான இயந்திரத் துப்பாக்கி வண்டிக்காரனுடைய கைக்குப் பழக்கமில்லாமல் இருந்தாலும், அதனுடைய வடிவம் அவனுக்குப்பிடித்து விட்டது. அவன் ஒரு 'கெடட் 'வீரனாக இருக்கும்பொழுது மண் குவியலில் பதிந்திருந்த சின்னத்தை விட வேறு எந்தவிதமான பிராணிகளுக்கும், குறிவைக்கவில்லை என்பது அவனுக்கு நினைவுக்கு வந்து விட்டது.



UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை

**சரத் விஜேசூரிய**

என் அப்பாவைப் பற்றி விந்தையான பல நினைவுகள் என் மனதில் பதிந்திருந்தாலும் அவற்றில் எப்பொழுதும் ஆசையுடன் நினைத்து மகிழும் ஒரு சம்பவம் நினைவுக்கு வருவதுண்டு. அந்த சம்பவம் உப்புசப்பற்ற ஒரு நிகழ்ச்சி என்று நீங்கள் எண்ணக்கூடும். ஆயினும் அது என் நினைவலைகளில் கலக்கும்போது நான் அடையும் ஆனந்தமோ அளப்பரியது. இந்த சம்பவம் ஏன் என் மனதோடு ஒன்றித்துள்ளதென்றால், என் தந்தையின் சில பழக்கவழக்கங்களை மீறிய தன்மை அதற்குள் இருந்து வெளிப்பட்டதோ என்று தெரியவில்லை.

நான் மிகவும் பாராட்டி நினைத்துப் பார்க்கும் அந்த சம்பவம்தான் என்ன? அதனை விபரிக்கும் முன்னர், என் அப்பா எப்படிப்பட்டவர் என்பதை விளக்குவது பயனுள்ளதாக இருக்கும் என்று நினைக்கிறேன். எட்டு சகோதர சகோதரர்களிடையே நான்தான் கடைக்குட்டி, நான் சொல்வதற்கு முற்படும் இந்தச் சம்பவம் நிகழ்ந்தபொழுது எமது குடும்பத்தில் யாருக்கும் தொழில் கிடையாது. மூத்த அண்ணா, அக்கா இருவரைத் தவிர நாம் எல்லோரும் படித்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது மூன்றாம் வகுப்பில் நான் படித்துக் கொண்டிருந்தேன்.

என் அம்மாதான் பாடசாலைக்கு என்னைக் கூட்டிச் சென்று சேர்த்தாள். பின்னர் என் அப்பாதான் தினமும் கூட்டிச் சென்றார். அப்பாவின் தொழில் துணிமணிகள் விற்பது. பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை விட்டு விட்டு உடனடியாக வீடு திரும்பும் அப்பா துணிமணிகளை அடுக்கி கட்டுகளாக எடுத்துக் கொண்டுவிற்பதற்கு சந்தைக்குக் கிளம்பி விடுவார். வாரம் ஏழு நாட்களும் தவறாமல் விற்பனைக்கென்று சந்தைகளுக்கு செல்வது அவரின் தொழிலாகும் சாவு வீடோ கல்யாண வீடோ இருந்தாலன்றி வேறு எந்தக்காரணத்திற்கும் விற்பனைக்குச் செல்லாமல் அப்பா தன் வியாபாரத்தில் நஷ்டத்தை ஏற்படுத்த விரும்புவதில்லை. எங்கள் குடும்பத்திலேயே எந்தவொரு முக்கியத்துவமான நன்மையான காரியங்களாயினும் அவரை இருத்தி வைப்பது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. அப்படி அவர் வீட்டில் நின்ற ஒரே ஒரு நாள் என் அக்காவின் பூப்புனித நீராட்டல் நடந்த நாள்தான் என்று என் அம்மா கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்.

"நான் வீட்டில் இருந்தால் பத்து வயிறுகளுக்கு சோறு போடுவது எப்படி?" என்பதுதான் அவர் வாயில் இருந்து உடனடியாக வெளிவரும் பதில் வார்த்தைகள். அதனால்தான் எப்பொழுதும் தன்னிச்சையாக செயல்படக்கூடியவராக இருந்தார்.

அப்பா எங்கள் மீது இரக்கம் இல்லாதவர் என்றுதான் நினைத்தேன். அவர் ஒரு முரட்டுமனிதர் என்ற கருத்துதான் என்சின்னஞ் சிறு வயதில் மனதில் பதிந்தது. சந்தையில் ஒருமுறை ஒருவனோடு வாய்த் தர்க்கம் ஏற்பட்டபொழுது துணிவெட்டும் கத்தரிக்கோலால் குத்தி பொலிஸ் நிலையம் சென்ற கதையெல்லாம் அம்மா விழிகளில் பயம் பொங்கக் கூறுவாள். அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களுடனும் அப்பாவுக்கு சில சமயங்கள் தர்க்கங்கள் ஏற்படுவதுண்டு. அந்த சமயங்களில் எமது வீடு சோகத்தில் ஒரு மரண வீடாக மாறும். எமது அதிர்ஷ்டத்தின் காரணமோ, என்னவோ சுலபமாக கோபப்பட்டு எவரோடும் சர்ச்சையில் இறங்க தூண்டப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டார். எங்களுடன்கூட தேவையேற்பட்டால் அன்றி அப்பா பேச மாட்டார். என் நினைவுக்கெட்டிய வரையில் எமது பெரியண்ணனுடன் அப்பா கதைத்து நான் பார்த்ததில்லை. இதற்கு என்ன காரணமென்று அம்மா சொன்னார். முன்பு ஒரு முறை துணிமணிகள் சைக்கிளில் கட்டி சந்தைக்குப் புறப்பட ஆயத்தமாக நின்றபொழுது பெரிய அண்ணன் கவனக் குறைவாக கை நழுவி சைக்கிளை வீழ்த்தி விட்டாராம். அதனால் கோபம் அடைந்த அப்பா துணி அளக்கும் அடிமட்டம் உடையும்வரை அண்ணனை அடித்தார். அந்த அடிகளின் வடுக்கள் இன்னமும் அண்ணனின் முதுகில் நினைவுச் சின்னமாக இருக்கின்றது.

அப்பா இவ்வளவு கோபக்காரராக இருந்தபொழுதும் அம்மா மேல் கோபம் கொள்ளாமல் இருந்ததுதான் எங்களுக்கெல்லாம் நினைக்க முடியாத ஒரு ஆச்சரியமாகும். ஆனாலும் அது உண்மை தான் அப்பா வெளியில் சென்றிருக்கும் சமயங்களில்கூட, நாங்கள் சுதந்திரமாக விளையாடுவதற்கோ, கூச்சலிடுவதற்கோ தைரியமற்றவர்களாக இருந்தோம். அப்பாவின் இந்த கண்டிப்பான தன்மையினால் நாங்கள் எல்லோரும் ஒரு உணர்ச்சியற்ற நிலைமையில்தான் வாழ்ந்தோம். இப்படியாக அப்பாவின் குணாதிசயங்களை மேலும் மேலும் சொல்லிக் கொண்டு போகலாம். ஆனால் எவ்வளவு சொன்னபோதிலும், அவற்றிலிருந்து ஒன்றை மட்டும் காணக்கூடியதாக உள்ளது. அப்பா முரட்டுத்தன்மை உள்ளவரென்றும், மோசமானவரென்றும் உடனே கோபப்படும் மனிதரென்றும்.

சிறு வயதிலிருந்தே தந்தையின் இந்த குணாம்சமான செயல்களை அவதானித்து வந்ததால் அவரிடம் எனக்கு நிறைய பயம் இருந்தது. என்னை அவர் அழைக்கும் குரலானது திடுக்கிட வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகுலையச் செய்யும். அவர் வியாபாரத்தில் இருந்து வீடு திரும்பும்போது வாங்கிக் கொண்டுவரும் வீட்டுச் சாமான்களை தருவதற்கு என்னைதான் அழைப்பார்.

"சின்னவனே"

வீட்டை நெருங்கி விட்டதற்கான அறிவிப்புதான் அது.

அப்பா வீடு திரும்பும்நேரம் நான் அங்கும் இங்கும் முற்றத்தில் உலாவிக் கொண்டிருப்பது என்பழக்கமாகும். அப்படியும் அவர் கண்ணில் நான் தென்படாவிட்டால், சைக்கிளிலிருந்து இறங்கியவாறே "சின்னவனே" என்று என்னை அழைப்பார். நான் உடனடியாக அவரிடம் ஓடிச் செல்வேன். என்னைக் காணாவிட்டாலோ அந்தக் குரல் உச்சஸ்தாயில் ஒலிக்கும். அதைத் தொடர்ந்து நானும் பயமும், அதிர்ச்சியுமாக அவரிடத்தில் ஓடுவேன். அப்படி ஏன் நான் பயப்பட வேண்டும் என்று சிலவேளையில் நானே யோசிப்பதுண்டு.

வழக்கமாக அப்பா சந்தையிலிருந்து திரும்பும்போது எனக்கென்று ஏதாவது வாங்கி வருவார். தனது கையில் இருந்து எடுத்து என் கையில் கொடுக்கும் அவர் பங்கு கொடுத்து சாப்பிடு என்று அன்போடு என் தலையை கோதி விடுவார். அப்பா என்னை அடித்ததாகவோ கண்டித்த நாளோ எனக்கு நினைவில்லை. நான் கடைக்குட்டி என்பதால்தான் என்னிடம் அவர் அன்பு என்று அம்மா அடிக்கடி கூறுவாள்.

மாதத்திலோ வாரத்திலோ ஒருதரம் எங்களையெல்லாம் கூட்டிக் கொண்டு அவர் படம் பார்க்கச் செல்வது இன்னொரு அதிசயமானவிசயம். படம் பார்க்கப் போகும் செய்தியை என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமாகத்தான் மற்ற எல்லோருக்கும் அறிவிப்பார். சந்தையில் இருந்து திரும்பி வந்து சாமான்கூடையை எனது கையில் தரும்போதுதான் இதனைக் கூறுவார்.

"சின்னவன் நேரத்துடன் சமைத்துவிட்டு படம்பார்க்க புறப்பட வேண்டும் என்று அம்மாவிடம் சொல்லு."

அப்பா என்ன சொன்னாலும் அதற்கு பதில் கூறாமலே அந்த இடத்திலிருந்து நழுவிவிடுவது என்னுடைய வழக்கமாகும். அம்மாவிடம் சொல்லும் நான் அதன் பின்னர் அண்ணனிடமும் அக்காவிடமும் அதைச் சொல்வேன். அந்நாளிலே நாங்கள் எல்லோரும் தயாராகி வெளியே வந்த பின் அப்பா ஜன்னல் கதவுகளை மூடிவிட்டு வெளியேவந்து "சீக்கிரம் வாருங்கள்" என்று அம்மாவிற்கும் மற்றவர்களுக்கும் கூறிவிட்டு "சின்னவன் ஏறு" என்று கூறி சைக்கிள் மீது என்னை உட்காரவைத்து கொள்வார்.

அப்பா என்னிடம் பாசம் காட்டினாலும் அவர் கருணையுள்ள மனிதர் என்று நினைப்பதற்கு என்னுடைய மனம் இடமளிக்கவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் நிரந்தரமாகவே அவரிடம் காணப்படுகின்ற பொல்லாத குணமாகும். அப்பா என்னை பள்ளிக்கூடத்திற்கு கூட்டிச் செல்வதற்கு ஆயத்தப் படுத்திக் கொண்டும்" சின்னவன் சீக்கிரம் வா" என்று என்னை கூப்பிடுவார். அக்குரலைக் கேட்டவுடன் என்னை ஆயத்தம் செய்வதற்கு அம்மா சுணங்கினால் அந்நேரத்தில் ஏற்படும் பயத்தால் என்னுடைய காற்சட்டை ஈரமாகிவிடும். அதற்காகவே அம்மா என்னை அவசரம் அவசரமாக ஆயத்தப்படுத்துவாள். ஏற்கனவே சைக்கிளில் ஏறி உட்கார்ந்து கொள்ளும் என் அப்பா உடையணிந்து கொண்டு தயாராக இருக்கும் என்னை இரு கரங்களாலும் வாரியெடுத்து சைக்கிள் மீது வைத்துக் கொள்வார். எனக்கு உட்கார்ந்து கொண்டு போவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இருக்கை சைக்கிளில் அமைந்துள்ளது. அதில் உட்கார்ந்த் பின் இரண்டு கால்களையும் போக் மீது வைத்துக் கொள்ள வேண்டும். அதன்பின் அப்பா பயணத்தைத் தொடங்குவார். பெருந்தெருவுக்கு செல்வதற்கு முன் வீட்டிலிருந்து போகும் சைக்கிளின் டயர்களுக்கு அகப்படும் மணல் கற்கள் சுழன்றுக் கொண்டு வந்து மட்கார்ட்டில் பட்டு சரசர என்ற சத்தத்தை உருவாக்கும். அச்சத்தம் என் மனதில் ஆனந்தமான எண்ணங்களை உருவாக்கிவிடும்.

பெருந் தெருவிலிருந்து கால் மைல் தூரத்தில் எங்கள் பள்ளிக்கூடம் இருந்தது 'கேட்' டுக்குள் சைக்கிள்களும் ஏனைய வாகனங்களும் கொண்டு போவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனால் 'கேட்டு' க்கு அருகில் சைக்கிளை நிறுத்தி வைத்து பூட்டிவிட்டு என் கையைப் பிடித்தபடியே வகுப்புக்குள் கொண்டுபோய் விடுவார். இது அப்பாவின் நாளாந்த வாழ்க்கையில் ஆரம்பச் செயல்களாகும். அப்பா இப்படி செய்தவையோ அனந்தமாகும். ஆயினும் இந்தப் பயணங்களில் தந்தையும் நானும் பேசிக் கொள்வது அற்ப சொற்பமாகும்.

ஒருநாள் வழக்கம்போல் அப்பாவுடன் சைக்கிளிலே பள்ளிக்கூடத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். அன்று எனக்கொரு கற்பலகை ஒன்று எடுப்பதற்குத் தேவைப்பட்டது. என்னுடைய கற்பலகையிலிருந்த மரச் சட்டம் கழன்று பயன்படுத்தவே முடியாமலிருந்தது. எவ்வளவுதான் கரி பூசினாலும் கற்பலகையில் எழுத்தை எழுதுவதற்கு முடியாமலிருந்தது. ஆனாலும் அப்பாவிடம் சொல்லி ஒரு கற்பலகையை விலைக்கு வாங்குவதற்கு எனக்கு தைரியமில்லை. எங்களுடைய தேவைகளை யெல்லாம் நாங்கள் செயல்படுத்திக் கொள்வது அம்மாவின் வழியாக அப்பாவிற்கு அறிவித்துத்தான். இருந்தாலும் இதைப்பற்றி அம்மாவுக்குக் கூறுவதற்கும் நான் தயங்கினேன்.



UNIVERSITY OF PERADENIYA
17-2-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பலகை மரச்சட்டம் கழன்று பாவிக்கவே முடியாத அளவுக்கு போனது என்னுடைய தவறுதான் என்று அப்பா என்னைத் திட்டுவார் என்று நான் நினைத்தேன். ஒருநாள் அந்திப்பொழுது விறாந்தையிலிருந்து கற்பலகையில் கணக்கைச் செய்து கொண்டிருந்தேன் அவ்வேளையில் என் பின்னால் அப்பா நின்றுக் கொண்டிருந்தார். அப்பாவைக் கண்ட நான் உடனே திடுக்கிட்டு விட்டேன்."

"கற்பலகை மிகவும் மோசமாகி விட்டதுதானே" என்று அப்பா என்னிடம் கேட்டார்.

"இல்லை" என்று கூறி நான் தலையை கீழே குனிந்துக் கொண்டேன்.

"நான் நாளைக்கு சந்தையிலிருந்து வரும்போது ஒன்று வாங்கி வருகிறேன்" என்று கூறி அப்பால் போனார்.

ஆனாலும் மறுநாள் அப்பா கூறியபடியே சந்தையிலிருந்து கற்பலகை வாங்கிவரவில்லை. அப்பா ஒரு கற்பலகை வாங்கிக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கையுடன் நான் அன்று பின்னேரம் தந்தையின் வரவை எதிர்பார்த்து முற்றத்தில் காத்து நின்றேன். அன்று வழக்கம்போல் அவர் வந்தாலும் அவர் கற்பலகை வாங்கிக் கொண்டு வரவில்லை. என்றாலும் அதைப்பற்றி நான் அவரிடம் கேட்கவும் இல்லை. நான் கற்பலகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்ற நினைவு அப்பாவுக்கு இருப்பதை கூறிய வார்த்தைகளால் நான் ஊகித்துக் கொண்டேன்.

"சந்தையில் நல்ல கற்பலகை இருக்கவில்லை சின்னவன். நான் நாளைக்கு காலையில் ஒன்று எடுத்துத் தருகிறேன்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அதற்கு பதிலளிக்கவுமில்லை. அப்பா என்னிடமிருந்து பதிலை எதிர்பார்க்கவுமில்லை.

மறுநாள் சைக்கிளில் ஏறுவதற்கு முன்னே எனக்கு கற்பலகை நினைவுக்கு வந்துவிட்டது. அது அப்பாவுக்கு மறந்து விட்டது என்று நினைத்தேன் எதற்கும் நான் பழைய கற்பலகையை பைக்குள் போட்டுக் கொண்டேன். ஆனாலும் அப்பா கற்பலகை ஒன்றை வாங்கிக் கொண்டு போவோம் என்று சந்தியில் சைக்கிளை நிற்பாட்டினார். புதியதாக ஒரு கற்பலகையும் ஒரு கல்குச்சியும் எனக்கு வாங்கித் தந்தார். அதை நான் பத்திரமாக பைக்குள் போட்டுக் கொண்டேன்.

மீண்டும் என்னை சைக்கிளில் வைத்துக் கொண்டு தந்தை தெருவின் மறுபக்கம் செல்வதற்கு ஆயத்தமாகும்போது பின்னாலிருந்து ஓடிக் கொண்டு வந்த ஒரு பிள்ளை சைக்கிளில் மோதப் பார்த்தது. அப்பா சைக்கிளை உடனடியாக நிறுத்திவிட்டதால் அந்தப் பிள்ளை சைக்கிளில் மோதாமல் மயிரிழையில் தப்பியது. அப்பா பிள்ளையை முறைத்துப் பார்ப்பதை நான் கண்டேன். பிள்ளை அக்கம் பக்கத்தில் நிற்காமலேயே ஓடிவிட்டான்.

இன்று எனக்கு புதிய கற்பலகையில் புதிய கல்குச்சியால் எழுத முடியும் அதைப்பற்றி கனவு கண்டு கொண்டிருந்த நான் ஸ்போக் மீது வைத்திருந்த இரண்டு கால்களையும் ஆட்டினேன்.

எதிர்பாராத வகையில் என்னுடைய சப்பாத்துக்கள் ஸ்போக் கம்பிக்குள் நுழைந்து விட்டது. சைக்கிள் உடனே ஒரு பக்கம் புரண்டு விட்டது.

என்னுடைய முழங்கால் கொஞ்சம் உராய்ந்து விட்டது. சப்பாத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்போக் கம்பிக்குள் சிக்கிக் கொண்டது. அப்பாவின் நெற்றியிலிருந்து இரத்தம் வழியத் தொடங்கியது. அதைக் கண்ட நான் பயத்தால் வெலவெலத்துப் போனேன். உடனடியாக என் காற்சட்டை ஈரமாகிப் போனது எனக்குத் தெரிந்தது. அப்பா என்னை தண்டித்து விடுவார் எனப் பயந்தேன். அப்பா சைக்கிளை தூக்கி தெருவின் ஓரத்தில் நிற்பாட்டினார். அதன் பின் இரண்டு கால்களுக்கிடையில் சைக்கிள் சில்லை வைத்துக் கொண்டு ஸ்போக்கை நிமிர்த்தினார் ஸ்போக்குக்குள் மாட்டியிருந்த சப்பாத்தை எடுத்துக் கொண்டு என்னை சைக்கிள் மீது உட்காரவைத்து என் கால்களில் சப்பாத்தை மாட்டினார். அப்பாவின் நெற்றியிலிருந்து வழிந்த இரத்தம் சட்டை மீதும் சாரத்தின் மீதும் படிந்திருந்தது. வெள்ளைச் சாரம் சில சில இடங்களில் இரத்தத்தால் நனைந்திருந்ததை நான் கண்டேன். என்னுடைய உடம்பு நடுநடுங்கத் தொடங்கியது. கூடியிருந்தவர்கள் அப்பாவிடம் ஏதோ கேட்பதைக் காணக்கூடியதாக இருந்தது. எனக்கு எதுவுமே தெளிவாகவில்லை. எனக்கு தலை சுற்றுவது போலிருந்தது.

"மகனே உனக்கு வருத்தமாக இருக்கிறதா?"

அப்பா என்னை "மகனே" என்று அழைத்தது இதுவே முதற் தடவையாகும். என் செவிகளுக்கு அது நம்பக் கூடியதாக இல்லை.

"இல்லை" நான் அவருக்கு பதில் கூறினேன். பதிலுக்கு அப்பா உங்களுக்கு வருத்தமாக இருக்கிறதா என்று நான் கேட்க வேண்டியவனாக இருந்தாலும் என் வாயிலிருந்து வார்த்தைகள் ஏனோ வெளிவரத் தயங்கின. தந்தை குனிந்து தன்னுடைய சாரத்தால் நெற்றியிலிருந்து வழிந்த இரத்தத்தை துடைத்துக் கொண்டார். சாரம் மேலும் ரத்தத்தில் தோய்ந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் சைக்கிள் மீது ஏறி என்னை பள்ளிக்கூடத்திற்கு கூட்டிக் கொண்டு போனார். கேட் டுக்கு அருகில் சைக்கிளை நிற்பாட்டிய வண்ணம் "இன்றைக்கு இங்கிருந்து போ "என்று கருணை ததும்பும் குரலுடன் கேட்டுக் கொண்டார்.

நான் 'ம்' என்று கூறிவிட்டு சற்று தூரம் சென்று திரும்பிப் பார்த்தேன். அப்பா சைக்கிளைத் திருப்பிக் கொண்டு போனார்.

வகுப்பறைக்குள் நுழையும்போது என்னுடைய உள்ளம் மிகவும் கலங்கிப் போயிருந்தது. பழக்கத்தினால் நான் வழமையாக உட்காரும் இடத்தில் அமர்ந்திருந்தாலும் எனக்கு ஒன்றுமே சொல்லிக் கொள்ளவோ செய்யவோ முடியவில்லை. மீண்டும் என் காற்சட்டை ஈரமாகி விட்டதை நான் உணர்ந்தேன்.

அப்பா என்னை என்ன செய்வாரோ? அவர் ஆத்திரத்தை வெளிப்படுத்தாததற்குக் காரணம் வீட்டிற்குச் சென்றபின் என்னை கண்டிப்பதற்கா? என்மீது இரக்கம் கொண்டா மகனே என்று அழைத்தார். அவர் என்னைப் பற்றி அப்படி நினைக்கத்தான் வேண்டுமா? தவறு என்னுடையதுதானே, என் தவறினால் அப்பா காயமடைந்துள்ளார் அப்பா செத்துப் போவாரோ என்ற பயம் என்னுள் ஏற்பட்டது. கடவுளே அப்படி நடக்கக் கூடாது என்று நான் மனசுக்குள் புலம்பிக் கொண்டேன். எட்டுப் பேருக்கு சாப்பாடு தேடுவது எப்படி என்று அப்பாவின் வழக்கமான அந்த வார்த்தைகள் என் மனதில் திடீரென எதிரொலித்தது. அப்பா வீட்டில் போய் என்ன செய்வாரோ அப்பாவுக்கு எதிராக கதைப்பவர் எவரையும் அவர் பொறுக்க மாட்டார். அவர் இப்போது காயமடைந்துள்ளார். அவர் என்னை என்ன செய்வாரோ இது விசயமாக வீட்டில் போய் அவர் என்ன தகராறு செய்வாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியை வகுப்புக்கு வந்தார். சைக்கிள் புரண்டது பற்றியும் அப்பா காயமடைந்தது பற்றியும் அவருக்குத் தெரியுமா? என் தவறினால் சைக்கிள் புரண்டது என்று தெரிந்தால் என்னை அவர் தண்டித்து விடுவாரா? தலைமை ஆசிரியரிடம் அவர் என்னை அனுப்பி விடுவாரா? எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

ஆசிரியை கரும்பலகையில் கணக்கெழுதத் தொடங்கினார். என்னுடைய புதிய கற்பலகையை எடுத்து அதை எழுதி கணக்கு முழுவதையும் செய்து சரி போட்டுக் கொள்வற்கு இருந்தால் நல்லது என்று எண்ணினேன். ஆனாலும் கற்பலகையை வெளியே எடுப்பதற்கு இப்பொழுது எனக்கு பயம் ஏற்பட்டது. கற்பலகை மீண்டும் எனக்கொரு விபரீதத்தை உண்டாக்கி விடுமா? ஆசிரியைக்கு கணக்கை காட்டப் போனால் கற்பலகை ஏது என்று கேட்பார்? அப்போது நான் என்ன சொல்வது கற்பலகையை வாங்கிக் கொண்டு வரும்போது சைக்கிள் புரண்டு விட்டது என்பதை அவர் தெரிந்து கொள்வார் கணத்துக்குக் கணம் என் உள்ளம் கலக்கமடைந்தது எப்படியும் வகுப்பில் பாடத்தை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் எனக்கு அவர் தண்டனை கொடுப்பார் . நான் பழைய கற்பலகையை எடுத்து கணக்கு செய்யத் தொடங்கினேன்.

புதிய கற்பலகையை எடுத்து கணக்கு செய்ய முடியாமற் போனதையிட்டு எனக்கு மிகவும் கவலை ஏற்பட்டது. கணக்கு செய்வதற்கு என்னுடைய மனம் ஒருநிலையில் இல்லை. இடைக்கிடையே அப்பாவின் நினைவு எனக்கு உண்டானது. அப்பாவின் நெற்றியிலிருந்து இன்னும் இரத்தம் வழிந்து கொண்டிருக்கிறதா? எனக்கு கற்பலகையில் கணக்கெழுதுவதற்கு இயலாமலிருப்பது தெரிந்தது. எனக்கு இன்று வீட்டில் என்ன நடக்குமோ? ஒருநாள் அண்ணனின் கை நழுவி அப்பாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிளை விழுத்தி விட்டது பற்றியும், அப்பா கோபமடைந்து துணி அளக்கும் அடிமட்டம் உடையும்வரை அடித்தது பற்றிய சம்பவம் இப்போது என் நினைவுக்கு வந்தது. அண்ணன் அளவு கோலால் வாங்கிய அடிகளைத் தாங்கிக் கொண்டாலும், என்னால் அதை தாங்கிக் கொள்ளவே முடியாது. என்னுடைய பிஞ்சு கை கால்கள் துண்டு துண்டாகப் போய்விடும். இடைவேளையில் எனக்கு குடிக்க தேநீர் போத்தலை கொண்டு வருவது அம்மாவின் வழக்கமாகும். அம்மா இன்று வராமல் இருப்பாளா? இல்லை அம்மா வராமல் இருப்பதற்கு காரணமே இல்லை. அம்மா வருவாள் அப்பா என்னை என்ன செய்வார் என்று அவரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ள முடியும். அப்பாவுக்கு அகப்படாமல் எங்கேயாவது என்னை ஒளித்து வைக்க அம்மாவுக்கு முடியாதா?

இடைவேளை மணி அடித்ததுதான் தாமதம் நான் அம்மாவைத் தேடி ஓடினேன். தேநீர் குடிக்க எனக்கு பசியோ, தாகமோ இருக்கவில்லை. அப்பாவிடமிருந்து என்னைக் காப்பாற்றும்படி அம்மாவிடம் கூற வேண்டும். அம்மா கண்ணுக்குத் தட்டுப்படவில்லை. என் பயணம் பின்வாங்கி விட்டது. எனக்கு பொறுக்கவே முடியாத மனவேதனை ஏற்பட்டது.

"மகனே"

எங்கிருந்தோ வந்து என் கையைப்பிடித்தார் அப்பா. அப்பாவின் நெற்றியில் பிளாஸ்திரி ஒன்று போடப்பட்டிருந்தது. கடவுளே அப்பா என்ன இங்கே? அப்பா ஏன் இன்றைக்கு சந்தைக்குப் போகவில்லை. என் உடல் சில்லிட்டது.

"இன்று நான் தேநீர் எடுத்துக் கொண்டு வந்தேன்"

"அப்பா நீங்கள் சந்தைக்குப் போகவில்லையா? "நான் துணிந்து கேட்டேன்

"இல்லை இன்று சந்தை அவ்வளவு வாய்க்கவில்லை."



UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடத் தோட்டத்தில் மாமரத்தடியில் உட்காரவைத்து அப்பா எனக்கு ஒரு சீனி பனிசும், வாழைப் பழம் ஒன்றையும் என் கையில் கொடுத்தார். அப்பாவின் இச்செயல்களை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. அப்பா தேநீர் போத்தலிலிருந்து வார்த்தார்.

"இன்று பால் கொண்டு வந்தேன்."

இப்பொழுது நான் காண்பது கனவா நனவா என்று எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. இல்லை அப்பா உண்மையாகவே என் அருகில் இருக்கிறார். பனிசை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் என்னை அப்பாவின் இரக்கம் ததும்பிய விழிகள் பார்த்துக் கொண்டிருக்கிறது. எனக்கு பனிசை மிகவும் ஆசையுடன் சாப்பிடுவதற்கு கஷடமாக இருந்தது. அப்பா முன்பு எந்த ஒரு நாளும் இப்படியான இரக்கத்துடன் நடந்து கொண்டதை நான் பார்த்ததேயில்லை.

"சீக்கிரமாக சாப்பிட்டுவிட்டு பாலை குடி மகனே"

"கற்பலகை உடைந்திருந்ததா?"

"இல்லை"

"மகனே அதில் எழுதினாயா"

என் இரு கண்களிலும் கண்ணீர் வழிவதை நான் உணர்ந்தேன்

"தலைமை ஆசிரியரிடம் சொல்லி வீட்டுக்குப் போவோம் மகனின் உடம்பு நோகுதல்லவா?"

அப்பாவின் வார்த்தைகளில் தொனித்த காருண்யம் என்னுடைய மனதுக்குப் பட்டது. அந்த நேரத்தில் என் அப்பா பற்றி ஏற்பட்ட உணர்வு எப்படி என்று என்னால் விபரிக்கமுடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு சப்பாத்துக்கள்.

ஜயதிலக்க கம்மெல்லவீர

உத்தியோகக் களைப்பு ஏற்படுத்திய தூங்கி வழிந்த முகங்களுடைய மனிதர்களினால் நிறைந்த தெருக்கள். அந்த மாலை நேரத்தில் ஊர் மத்தியில் விழுந்து கிடந்த வீதியின் ஓரத்தில் இருந்த சிரிதாஸ, தன்னுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு யாரிடமிருந்து உதவியைப் பெறலாம் என்று காத்துக் கொண்டிருந்தான். காலை தொடக்கம் பின்னேரம் வரை இயந்திரங்களின் இசையிலும் அலுவலகத்திலிருக்கும் கடிதக் குவியல்களுக்கு மத்தியிலும் மூழ்கிக் கிடந்த மனிதர்கள் அந்தியில் மீண்டும் சந்தோசமான மனநிலையில் வீடு நோக்கிச் செல்லவில்லை என்பது சிரிதாஸவுக்கு இதற்கு முன் புரியவில்லை. தன்னைக் கடந்து செல்லும் ஏனைய மனிதர்களின் முகங்களை உன்னிப்பாகப் பார்ப்பதற்கு வேறெந்த நாளிலும் தேவையாக இருக்கவில்லை.

நாளாந்த இருட்டை முகத்தில் பூசிக் கொண்டு நடக்கும் பெரும்பாலானோர், தேங்காய், இரண்டு காய்கறி, இல்லாவிட்டால் அரிசி, மசாலாத்தூள் கொஞ்சம் தாங்கிய சாமான் பையைக் கையில் காவிக் கொள்வார்கள். அவர்களுடைய முகத்தில் காணப்படும் நம்பிக்கையற்றத் தன்மையையும், அவர்களுடைய சாமான்களுக்கிடையிலிருக்கும் சம்பந்தத்தையும் சிரிதாஸவுக்கு புரிந்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு அனுபவம் இருக்கவில்லை.

"என்னுடைய கருமத்திற்கு இன்று எல்லோருக்கும் கோபம் வந்து விட்டதுபோல் இருக்கின்றது" சிரிதாஸ நினைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு ஆண்டுகளாக உத்தியோகமொன்றைத் தேடிக் கொள்வதற்கு முயற்சித்த சிரிதாஸ அந்த நடவடிக்கைகளினால் சோர்ந்துபோயிருந்தான்.

"ஏன் மேலே படிக்கவில்லை" என்று அவனுடைய வரலாறு தெரியாதவர்கள் சிரிதாஸவிடம் எப்போதும் கேட்பார்கள். இவ்வளவு தூரமாவது படித்தது பெரிய சாதனைதான் என்பது சிரிதாஸவின் நினைப்பு. பல்கலைக்கழகம் செல்வதற்குரிய தகுதியிருந்தும் அத் தராதரத்திற்குரிய புத்தகங்களுக்கு விடை கொடுப்பதற்கு காரணமான சம்பவங்களையிட்டு கொஞ்சம் காலம் கவலையாக இருந்தான். பிறந்த நாள் தொட்டு அனுபவித்த துன்பங்களோடு இதுவும் ஒரு துன்பமாகச் சேர்ந்துக் கொண்டது.

பள்ளிக்கூடம் போவதை நிறுத்தி ஆறு வருடங்கள் கடந்தாலும் சிரிதாஸ ஒன்றுமற்றவனாக இருந்தான். ஆயினும் அவன் தாய், தந்தையர் உழைக்கும் சம்பாத்தியத்தை விழுங்கும் ஒருவனுமல்ல. அவன் இருந்து தின்ன எதையாவது சம்பாதித்து வைப்பதற்கு அவனுடைய பெற்றோருக்கு சக்தியிருக்கவில்லை. அதனால் அவனுடைய நண்பர்களுடன் பொழுது கழிந்து விட்டது.

அமைச்சர்களுக்கு, உறுப்பினர்களுக்கு அல்லது ஆணையாளர்களுக்கு, அதைப்போன்ற தகுதி படைத்தவர்களுக்கு கொஞ்சம் சொந்தம் பந்தம் இல்லாதது எவ்வளவு துர்ப்பாக்கியமானது என்பது இப்பொழுதுதான் தெளிவானது. அப்படியான அதிர்ஷ்டமற்றவர்கள் உத்தியோகத்துக்காகத் தேடித் திரியும் காரியங்கள் அனைத்தையும் ஆறுவருடங்களாகச் செய்தான். அவன் நாள் தவறாமல் யார் வீட்டிலாவது தினசரிப் பத்திரிகைகளை எடுத்து விளம்பரங்களைப் பார்ப்பான். வாரத்திற்கொரு முறை தபால் நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று அரசாங்க வர்த்தமானியைப் பார்ப்பான். இரண்டு, மூன்று கிழமைகளுக்கு ஒரு தடவை விண்ணப்பப் பத்திரத்தை பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, சும்மா இருப்பதற்கான வரியை அரசாங்கத்திற்கும் செலுத்தினான். ஏழெட்டு மாதங்களுக்கு ஒருமுறை நண்பர்களிடமிருந்து கால் சட்டை, மேல் சட்டை இரவல் வாங்கிக் கொண்டு தன்னுடைய சான்றிதழ்களையும் சேர்த்து வைத்த ஃபைலை தன் தனிமைக்காக காவிக் கொண்டு நேர்முகப் பரீட்சைகளுக்குப் போனான்.

பாஞ்சாலையிலிருக்கும் பிரதம பிக்குவினால் கொடுக்கப்பட்ட நற்சான்றிதழும், கிராமசேவகரின் அரச இலட்சினை பொறித்த பத்திரமும், தலைமை ஆசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்ட 'எனக்குத் தெரிந்தவரை அடக்கமான இளைஞன்' என்ற நற்சாட்சிப் பத்திரமும் அதிகம் பெறுமதியானது என்று கணக்கிலெடுக்கா விட்டாலும், தனக்கு இவ்வளவு நாளும் உத்தியோகம் ஒன்று கிடைக்காமற் விட்டதற்குக் காரணம் தான் கூடாத குணத் தன்மைப் படைத்தவனல்ல என்பது அவனுக்குத் தெரியும்.

தெருவோரம் இருந்து வீதியில் செல்லும் எல்லா ஆண்கள் முகத்திலும் ஒளிர்கின்ற கருணையை மனதில் கணித்து அவன் எல்லோருடைய பாதங்களையும் கண்காணிக்கத் தவறவில்லை. இரண்டு கறுப்பு சப்பாத்துக்களை தேடிக் கொள்வதற்கு இவ்வளவு தூரம் கஷ்டமாக இருக்கும் என்று காலை நேரத்தில் அவனுக்கு புலப்படவில்லை. சாதாரண உத்தியோகத்துக்கு செல்லும் சாதாரண மனிதர்கள் ஒவ்வொருவரும் கறுப்பு சப்பாத்து போடுவதில்லை என்பதைக் காணும் பொழுது ஒரு பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுப்பதாக அவனுக்குப் பட்டது.



UNIVERSITY OF PERADENIYA
17 - 2 - 1996
LIBRARY
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பு கால் சட்டையும், வெள்ளை மேல் சட்டையும், இரண்டு கறுப்பு சப்பாத்துக்களும் அணிந்து கொண்டு கொழும்பு கருவாக்காட்டில் இருக்கும் பாதுகாப்புச் சேவை அலுவலகத்துக்கு நாளை காலை எட்டு மணிக்கு சிரிதாஸ தோன்ற வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் இன்று காலைதான் கிடைத்தது. கறுப்பு கால் சட்டையும், வெள்ளை மேல் சட்டையும் தேடிக் கொள்வது அவ்வளவு தூரம் பிரச்சினையாக இல்லாவிட்டாலும், தன் நண்பர்களிடையே கறுப்புச் சப்பாத்து இல்லை என்பது அவனுக்குத் தெரியும். இரண்டு கறுப்புச் சப்பாத்துக்களை தேடிக் கொள்வதற்காக அந்த மாலைப் பொழுதில் வீதியருகில் வேலை விட்டுவரும் தெரிந்தவர்களிடமாவது வாங்குவதற்கு நின்று கொண்டிருந்தான். ஆனால், சிரிதாஸவின் கருமமோ, உத்தியோகத்திற்குப் போய் திரும்புபவர்களின் கருமமோ என்னவோ, எல்லோருடைய கால்களிலும் மலிவான செருப்புகளே காணப்பட்டன. கருணையுள்ளம் படைத்தவரென்று தான் கணக்கில் எடுத்த திலகரத்ன அவர்களைக் கண்ட சிரிதாஸவின் மனதுக்கு நிம்மதி ஏற்பட்டது. அவனுடைய மனதில் ஒரு சந்தோசத்தைக் காணா விட்டாலும், அவனுடைய இரண்டு கால்களில் இரண்டு செருப்புகளை அணிந்திருந்தாலும் தன்னுடைய பிரச்சினைக்குத் திலகரத்ன அவர்கள் ஏதாவது ஒரு வழிவகை செய்வாரென சிரிதாஸ கணித்துக் கொண்டான்.

அவனுக்கு உத்தியோகம் கிடைக்கவில்லையென கவலைப்படுகிறவர்களில் முதல் ஆளாக அல்லது இரண்டாவது ஆளாக திலகரத்ன இருப்பவர் என்பது சிரிதாஸவுக்குத் தெரியும். ஒரு தடவை நேர்முகப் பரீட்சைக்குப் போவதற்காக நண்பர்களிடம் பெற்றுக் கொண்ட மேற் சட்டையை, திலகரத்ன அவர்களின் மின் ஸ்திரிக்கையில் தேய்ப்பதற்குப் போனபோது அவனுடைய விபரங்களை கேட்டு மிகவும் துக்கப்பட்டதோடு, தன்னைப் பொறுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும்படி கேட்டுக் கொண்ட வேண்டுகோளும் சிரிதாஸவின் மனதில் பதிந்திருந்தது.

"வாழ்க்கையே அப்படித்தான் தம்பி. நானும் உன்னைப் போலவே கஷ்டப்பட்டவன். எனக்கும் ஒரு உத்தியோகம் இல்லாமல் பல வருடங்களாகக் கஸ்டப்பட்டேன். திலகரத்ன அவர்கள் அமைதிப்படுத்துவதற்கு சொன்ன வார்த்தைகள் உண்மையோ, பொய்யோ எதுவென்றாலும் அவருடைய குரலில் ஒரு உண்மையான பாசம் இருப்பதை சிரிதாஸ புரிந்து கொண்டான். அவன் அதற்குப் பின்பு திலகரத்ன அவர்களை "அண்ணே" என்று கூப்பிடுவதற்கு நினைத்தான். அந்தப் பாசத்தை அவனுடைய மனம் உணர்த்தினதால்தான் அவன் அண்ணே என்று அவனைக் கூப்பிட்டான்.

"அண்ணே ஒரு சின்ன சாமான் வாங்கிக் கொள்ள முடியுமா?" வார்த்தைகள் வெளிவரும்போது பணிவன்பு மிகவும் கூடுதலாக இருப்பதை உணர்ந்தான்.

"என்ன தம்பி?"

"கறுப்புச் சப்பாத்துக்கள் இரண்டு"

திலகரத்ன அவர்களுடைய முகத்தில் பிரச்சினைக்குரிய கேள்விக் குறி படிந்தது.

"கறுப்புச் சப்பாத்துக்கள் இரண்டா?"

"ஆம் . . . . கறுப்புச் சப்பாத்துக்கள் இரண்டு . . . . . நாளைக்கு சின்னதொரு இண்டர்வ்வியூ" இருக்கின்றது. கறுப்புச் சப்பாத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு அணிந்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். சிரிதாஸ நிறுத்தாமல் சொல்லிக் கொண்டு போனான்.

"என்ன இண்டர்வ்வியூ இராணுவத்திலா?"

"இல்லை செக்யூரிட்டி நிறுவனத்தில்"

"ம் . . . . "

தீர்மானம் இல்லாமல் கீழே தன்பார்வையைச் செலுத்திக் கொண்டு சிறிது நேரம் யோசித்தான்.

"க . று . ப்பு . . . சப் . . பா . . த்து . . . கள்" அவனுடைய உதடுகள் முணுமுணுத்தன.

"தம்பி அதுவென்றால் அவ்வளவு தூரம் இலகுவானதல்ல. நான் என்ன யோசித்தேன் தெரியுமா? யார் இங்கே கருப்பு சப்பாத்து போடுவார்கள் என்றுதான் . . . ஒருத்தருமே இல்லை தம்பி. உனக்குத் தெரிந்த பொலிஸ்காரார்கள் இல்லையா?"

கறுப்பு சப்பாத்துக்களைப் பற்றிய சரியான தகவல் கிடைத்ததையிட்டு மனம் ஆசுவாசம் அடைந்தது.

"அண்ணே உங்களுக்கு மிகவும் நன்றி. இப்பொழுது எனக்கு தேடிக்கொள்ள முடியும். எனக்கு மகலேகொட பொலிஸ்காரரை கொஞ்சம் பழக்கம்."

சில மணித்தியாலங்களுக்குப் பின் திருப்பிக் கொடுக்கும் வாக்குறுதியுடன் மகலேகொட பொலிஸ்காரரிடம் இருந்து கறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பாத்துக்கள் இரண்டை பெற்றுக் கொள்வதற்கு சிரிதாஸவுக்கு வாய்த்து விட்டது. அதற்காக தன் தாய், தந்தையுடைய விபரங்கள் வீட்டுச் சாப்பாட்டு விபரங்கள் மட்டுமல்ல, தன் வீட்டுக்குப் போகும் பாதை என சரியான தகவல்களை சொல்ல வேண்டிய நிலை சிரிதாஸவுக்கு ஏற்பட்டது. அதுமட்டுமல்ல,' தான் பொலிஸ் உத்தியோகஸ்தர் என்றாலும் இரக்கம் உள்ள மனித நல்லதுக்கு நல்லது, கெட்டதுக்கு கெட்டது என்ற "ஸ்ரெயிட் போர்வேட்" மனிதனென்றும்' குடிபோதையில் விளக்கம் கொடுத்து முடியும்வரை மகலேகொட பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு காது கொடுத்துக் கொண்டிருந்தான் சிரிதாஸ.

"தம்பி இது என்னுடைய கடமையைச் செய்யும் கால்கள் இரண்டு. வேலையை முடித்துவிட்டு "டான்" என்று திருப்பிக் கொடுத்துவிடு விளங்குதா?" மகலேகொட பொலிஸ் உத்தியோகஸ்தர் இரண்டு சப்பாத்துக்களை கடதாசி துண்டொன்றால் சுற்றி அவன் கையில் வைக்கும்போது சொன்னார்.

தனக்கிருக்கும் சான்றுப் பத்திரங்கள் பெறுமதியற்ற தெனசிரிதாஸவுக்கு மறுபடியும் தோன்றியது. பழைய பொலிஸ் அதிகாரியாகக் காணப்பட்ட அந்தப் பாதுகாப்பு சேவையின் பணிப்பாளர் சிரிதாஸவின் சான்றிதழ்களைக் கையிலெடுத்தாலும், அதில் எழுதியிருந்ததைப் பற்றி ஒரு கவனத்திற்கு எடுக்கவில்லை. ஆனாலும் அவனை உத்தியோகத்துக்கு எடுத்துக் கொண்டார்.

"தகுதியெல்லாம் சரி மூன்று வருடங்களுக்கு தற்காலிகமாக நீ வேலை செய்ய வேண்டும். தெரியுதா?"

பணிப்பாளரின் பார்வையும், குரலும் மிடுக்காகக் காணப்பட்டது. அவனென்றால் நிச்சயமாகக் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரி என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிதாஸ நினைக்கும்போதே அவனுக்கு ஒரு பொய்யேதும் பேசுவதற்கு இடம் வைக்காமல் உடனடியாக வேலையைப் பொறுப்பெடுப்பதற்கு தயாராக வேண்டுமென கட்டளையிட்டார்.

"டக்ளஸ் இவனுக்கொரு தொப்பியும், பெட்ஜ் ஒன்றும் கொடு" பணிப்பாளரின் கட்டளைக்கு இணங்க சிரிதாஸவின் கைகளுக்கு அவை கொடுக்கப்பட்டன. அதேவேளையில், புதிய பாதுகாப்பு வீரனாக தொப்பி ஒன்றையும் போட்டுக்கொண்டு மார்பின் முன் பக்கம் தூக்கிக் கொண்டிருந்த சின்னம் சகிதமாக கடமையை ஏற்பதற்கு தயாராக இருந்தான். அவனுக்கு கடமையிலிருக்கும் சட்ட திட்டங்களையும், நிபந்தனைகளையும் பணிப்பாளர் வாகனத்தை ஓட்டியபடியே விளக்கினார்.

"இப்பொழுது காலை பத்து மணிக்கு ட்யூட்டி ஆரம்பமாகும். இரவு பத்து மணிக்கு ஓஃப் தெரியுதா?" நாலு மணி நேரத்திற்கு ஓவர் டைம் கொடுப்போம். தாங்கள் கடமையாற்றும் இடத்தில் எல்லாவற்றுக்குமே வகை சொல்லியாக வேண்டும். விளங்குதா? நேர்மையாகக் கடமையைச் செய்தால் சம்பளம் அதிகரிக்கப்படும்."

பெரிய பங்களாவின் கேட் அருகில் இருக்கும் பலகைக் கூட்டுக்குள்ளிருந்து கண்காணித்துக் கொண்டிருப்பதே சிரிதாஸவிற்குக் கொடுக்கப்பட்ட கடமையாகும்.

அவனைக் கூட்டிச் சென்ற பணிப்பாளரினால் அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்த பாதுகாப்பு வீரன் கடமையிலிருந்து விடுவிக்கப்பட்டான். அவனது கையிலிருந்த குறிப்புப் புத்தகத்தை வாங்கி சிரிதாஸ கையில் ஒப்படைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முக்கியமாக நடக்கும் எல்லாச் சம்பவங்களையும் இந்தப் புத்தகத்தில் எழுத வேண்டும் தெரியுதா?"

தனக்கு என்ன நடந்தது என்பதை பணிப்பாளர் வாகனம் மறைந்து போனபின் சிந்திக்கத் தொடங்கினான். பழைய பொலிஸ் அதிகாரியின் கடமையினால் கிடைக்கப் பெற்ற காட்டு மிராண்டிப் பார்வையும், கொடூரமான குரலுமே அப்பாவி இளைஞனான அவனது நாடி நரம்புகள் செயல்கள் எல்லாவற்றையும் அடக்கி விட்டன என்பது சிரிதாஸவுக்கு புதிய அனுபவமாக இருந்தது. பணிப்பாளரைக் கண்டது தொடக்கம் இப்போதுவரை சிரிதாஸ ஒரு கைப்பாவையாக செயல்பட்டதை உணர்ந்தான். நடந்தவற்றையெல்லாம் நினைவுக்குக் கொண்டு வந்தபின் தனக்கு ஒரு உத்தியோகம் கிடைத்திருக்கிறதென்று சிரிதாஸவுக்கு புரிந்து விட்டது.

ஒரு அவசர காரியத்திற்கு அருகிலிருக்கும் பொலிஸ் நிலையத்திற்கு ஓடிச் செல்வதற்கு இடமும் தெரியாத வலமும் தெரியாத சிரிதாஸவுக்கு தானொரு பாதுகாப்பு வீரனாக சேர்ந்ததை நம்புவதற்கு அதிக நேரம் பிடித்தது. தன்னுடைய பாதுகாப்புக்குக் கீழ் இருக்கும் இந்த பங்களாவில் யார் யார் வாழ்கிறார்கள் என்பதை பலகைக் கூட்டுக்குள் பல மணித்தியாலங்களைக் கழித்த பின்னரே அவனுக்குப் புரிந்தது.

எந்த விதமான ஓசையுமில்லாமல் கேட்டுக்கு அருகில் வந்த காரொன்று, அதிலிருந்து "ஹோர்ன்" சத்தத்தை கிளப்பவே பங்களாவின் மேல் மாடியில் ஜன்னல் ஒன்று திறக்கப்பட்டது. அதில் பெண்ணின் குரல் கேட்டது.

"செக் . . . . யூட் . . . . டரி இந்தக் கேட்டைத் திறவும்"

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிதாஸ கேட்டைத் திறக்கும் பொழுது கார் மெதுவாக பங்களாவின் கராஜுக்குள் நுழைந்தது.

பள்ளிக்கூட சீருடை அணிந்த இரண்டு பிள்ளைகள் இறங்கிப் போவதை சாடையாகக் கண்டான்.

புதிய அனுவங்களில் சிக்கியிருக்கும் சிரிதாஸவுக்கு திடீரென மகலேகொட பொலிஸ் உத்தியோகஸ்தரின் நினைவு வந்துவிட்டது. இரண்டொரு மணித்தியாலங்களின் பின் திருப்பித் தருவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு வந்த தான் கடமையாற்றுவது நினைவுக்கு வந்த பின் சிரிதாஸவினுடைய மூளை குழப் பத்திற்குள்ளாகியது. அதிர்ந்து போன அவனுடைய மனதில் பயம் குடிகொண்டது.

மகலேகொட பொலிஸ் உத்தியோகத்தருக்கு இருப்பது இந்த இரண்டு சப்பாத்துகள் என்றால்,.... அவருக்குத் திடீரென கடமையாற்ற ஏற்க நேர்ந்தால்,......

சப்பாத்துக்களை மீண்டும் அவரிடம் ஒப்படைப்பதற்கு நடுநிசியாகும் என அவனுக்கு இப்பொழுது பட்டது.

தனக்குக் கிடைத்த வேலை திடீரென கிடைத்ததாகக் கூறும் பொழுது, சப்பாத்தைக் கொடுக்க தாமதமானதையிட்டு சொல்லும்பொழுது கோபப்பட மாட்டாரென நினைத்த சிரிதாஸ, தனக்குத் தானே மனதுக்கு ஒரு ஆறுதலைத் தேடிக் கொண்டான். அத்தோடு ஒரு பிரச்சனையும் கூடவே எழுந்தது. யாருடைய சப்பாத்தைப் போட்டுக் கொண்டு நாளைக்கு வருவது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் இரண்டு மணியளவில் பலகைக் கூட்டுக்கு அருகில் வந்த வேலைக்காரப் பையன் ஒருவன், பேச்சு மூச்சு இல்லாமல் ஒரு சோற்றுப் பொட்டலத்தையும், தண்ணீர் கோப்பையையும் சிரிதாஸ கையில் கொடுத்துவிட்டுச் சென்றான். இந்த சம்பவங்கள் அனைத்தும் ஒரு மாயத் தோற்றமாகப்பட்டது.

மகலேகொட பொலிஸ் உத்தியோகஸ்தரின் சப்பாத்துகளைத் திருப்பித் கொடுப்பது பற்றியும் மீண்டும் மீண்டும் யோசித்திருக்கா விட்டால் , இந்த பாழடைந்த பங்களாவின் கேட்டுக்கருகில் பன்னிரண்டு மணித்தியாலங்கள் கழிப்பது என்பது ஒரு இலகுவான காரியமல்ல. எவ்வளவு தூரம்தான் யோசித்தாலும் பரிகாரம் காண முடியாத இந்த சிக்கலுக்குள் தத்தளித்துக் கொண்டாலும், அவன் கைப்பட குறிப்புப் புத்தகத்தில் சில வாக்கியங்களை எழுதினான்.

"மத்தியானம் இரண்டு மணியளவில் எனக்கு சாப்பாடு கிடைத்தது"

"சாயங்காலம் ஆறு முப்பதுக்கு பங்களாவின் விளக்கு எரிந்தது. இரவு எட்டு மணியளவில் கறுப்புக் கார் பங்களாவுக்குள் வந்தது."

இரவு சரியாகப் பத்து மணிக்கு பணிப்பாளர் வாகனம் பங்களாவின் கேட்டுக்கு முன்னால் வந்தது. சிரிதாஸவின் மனதுக்குள் ஒரு நிம்மதி ஏற்பட்டது. நிம்மதியை உடனடியாக அழித்துக் கொண்டு பணிப்பாளர் தன்னுடைய முடிவைச் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரவு கடமையை ஏற்கும் மனிதன் வரவில்லை. அதனால் காலை ஆறு மணிவரை சிரிதாஸ தொடர்ந்து ஓவர் டைம். விளங்குதா?"

"சேர் இன்றைக்கு எப்படியாவது வீட்டுக்குப் போக வேண்டும் என்று வார்த்தைகளை ஒவ்வொன்றாகக் கோர்ப்பதற்கு முன், பணிப்பாளர் வாகனத்தை ஓட்டிக் கொண்டு பறந்து விட்டார். அவன் ஒன்றுமே செய்ய முடியாதவனாக திகைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தான் பெருஞ் சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டிருப்பதாக சிரிதாஸ உணர்ந்தான். நாளை காலை வரை இங்கிருந்து அகல முடியாது. ஆறு வருடங்களாக வாழ்க்கையில் அனுபவித்த கசப்பான அனுபவங்களை தாங்கிக் கொண்ட அவனுக்கு இந்த பாழாய்ப்போன பங்களாவின் முன்னால் கழிப்பதை தாங்கிக் கொள்ள முடியும். ஆனாலும் மகலேகொட பொலிஸ் உத்தியோகஸ்தரின் இரண்டு சப்பாத்துக்களை இன்னும் பன்னிரண்டு மணித்தியாலங்கள் தாமதப்படுத்தினால் ஏற்படும் பயங்கரமான பிரச்சினைக்கு எப்படி முகம் கொடுப்பது? மகலேகொட பொலிஸ் உத்தியோகஸ்தர் நல்லதுக்கு நல்லது, கெட்டதுக்கு கெட்டது ஸ்ரெயிட் போர்வேட் பொலிஸ் உத்தியோகஸ்தர் மகலேகொட குடிபோதையில் சிவப்பேறிய கண்களை உருட்டிக் கொண்டு தன் முன்னால் தோன்றுவதாக நினைத்தான். தலையிலிருந்த தொப்பியையும், மார்பில் அணிந்திருந்த பெட்ஜையும் கழற்றி சாக்கடையில் எறிந்துவிட்டு ஓடுவதற்கு அவனைத் தூண்டியது. அத்தோடு, பெட்டன் பொல்லினால் துரத்தி வரும் சம்பவமும் தோன்றியது. பணிப்பாளர் பொலிஸ் உத்தியோகஸ்தரின் உருவமாகப் பட்டது. நாலாப் பக்கமும் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கி ஒடுக்கப்பட்டிருப்பதாக நினைத்தவுடன் இந்த புதிய பாதுகாப்பு உத்தியோக வீரனின் விழிகளில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

இரவு 11 மணியளவில் விளக்குகள் அணைந்து போனாலும், அதைப்பற்றிய எந்தக் குறிப்பும் புத்தகத்தில் எழுதப்படவில்லை. முன்னும் பின்னும் புரிந்து கொள்ள முடியாத ஒரு சிந்தனை சுழற்சியில் அகப்பட்டுக் கொண்டதே காரணமாகும்.

பலகைக் கூட்டுக்குள்ளிருக்கும் மின் விளக்கொளியை சுற்றி சுற்றி வந்துக் கொண்டிருக்கும் விட்டில் பூச்சிகளில் ஒன்றிரண்டு சிரிதாஸவினுடைய தொப்பிக்குள்ளும், வெள்ளைச் சட்டைக்குமிடையில் விழுந்து தத்தளித்தது. அவனுடைய இரு கால்களும் ஒன்றோடு ஒன்று பின்னியவாறு நாற்காலி முன் நீட்டப்பட்டு, சிரிதாஸவின் தலை தொங்கிய வண்ணம் அவன் நாடி நெஞ்சில் பட்டுக் கொண்டிருந்தது. இரு கைகளையும் தொடைகளுக்கிடையில் இறுக்கி வைத்துக் கொண்டு ஆடாமல் அசையாமல் இருக்கும் அவன் உருவம் பாதுகாப்பு வீரனைப்போல் அல்லாது ஒரு சிறைக் கைதியைப்போல் காணப்பட்டான். பல மணித்தியாலங்களுக்கு முன் குழப்பத்துக்குள்ளாகி சக்தியற்றுப் போன அவன், இப்பொழுது அரைகுறை தூக்கத்திலிருந்தான். அவனை சிந்தனைகள் பூதாகாரமாக ஆட்டிக் கொண்டிருந்தது.

பெரும் சத்தத்தைக் கிளப்பிக் கொண்டு ஒரு பொலிஸ் வாகனம் சிரிதாஸவீட்டு முற்றத்தில் நின்றது. வாகனத்தின் பின் கதவைத் திறந்து கொண்டு பெட்டன் பொல்லை கையில் தாங்கியபடி பொலிஸ் உத்தியோகஸ்தர் பலர் திமு திமுவென குதித்தனர். அவர்கள் சிரிதாஸ பின்னால் துரத்திக் கொண்டு வருகின்றனர். அவர்களிடமிருந்து தப்பித்துப் போக எடுக்கும் முயற்சி அவனுடைய கனமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பாத்துக்களை தூக்கிக்கொண்டு ஓடிப் போக முடியாத நிலை வியர்த்தமாக்கியது. மகலேகொட பொலிஸ் உத்தியோகஸ்தர் அவனுடைய தொண்டையை பிடித்தவுடனே அப்பாவி பாதுகாப்பு வீரனான அவன் திடுக்கிட்டு எழுந்தான்.

தன் முன்னால் நின்ற பணிப்பாளரைக் கண்ட சிரிதாஸ, நாற்காலி பறக்க அம்பைப்போல நிமிர்ந்தெழுந்தான். ஆனாலும் அவனுடைய தலையில் போடப்பட்டிருந்த தொப்பி பணிப்பாளரின் கையில் விழுந்தது.

"மிகவும் லட்சணமாக இருக்கிறது நீ செய்யும் கடமை" தொப்பியை அவன் கையில் கொடுக்காமல் திரும்பிப் போனான்.

பணிப்பாளர் மறுநாள் அவனிடம் வரும்பொழுது அவனுடைய மனம் நிம்மதியாக இருக்கவில்லை. உத்தியோகத்துக்கு வந்த முதல் நாளே தனது உத்தியோகத்தை இழந்ததாக சிரிதாஸவுக்கு சுருக்கமாகச் சொன்னான். பித்தளை இலச்சனையைக் கழற்றிக் கொண்ட பணிப்பாளர், சிரிதாஸவின் கையில் இருபது மணித்தியாலம் வேலை செய்ததற்கான கூலியை இருபத்தைந்து ரூபாவை வைத்தார்.

நேற்றுக் காலை அவனுடைய மனதுக்கு ஏற்பட்ட நிம்மதியைபோல இருபது முப்பது மடங்கு நிம்மதி அவன் மனதில் இப்பொழுது ஏற்பட்டிருந்தது. காலில் போட்டிருந்த இரண்டு சப்பாத்துக்களையும் கழற்றிக் கொண்டு சிறிது தூரம் விரைவாக நடந்து பஸ் வண்டியில் தொங்கினான். நிம்மதியான மனதோடு மகலேகொட பொலிஸ் உத்தியோகஸ்தரிடம் ஒப்படைக்கச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிசாசின் இரவு

தயாசேன குணசிங்க

அவன் நினைத்ததுபோலவே அந்த இரவு மிகப்பயங்கரமாகவே இருந்தது. அந்திப்பொழுதிலிருந்து மேலேமேலே வந்த கரி நிறமாக இருந்த மேகங்கள் ஆகாயத்தின் நிறத்தை காண முடியாமலேயே ஒரு சிறிய இடத்தைக்கூட விட்டுவைக்காமல் அழுக்குப்பட்ட சீமெந்து கலவையைப்போல் நாலா திசைகளுக்கும் பறந்து போயின. நிலவோ, பிறை நிலவோ, நட்சத்திரமோ, இதமான ஒளியின் சாயலோ அங்கு இருக்கவில்லை. அது தேவன் வருகை தரும் இரவல்ல பேய்கள், நரகாசுரர்கள் அகோரமாக நடமாடும் இரவு.

அந்திப் பொழுது தொடக்கம் வீட்டுப்பின்புறம் இருக்கும் வாழை மரத்தின் வாழைப்பூவில் தொங்கிக் கொண்டு அதன் சாற்றை உறிஞ்சிக் குடிக்கும் வெளவால், கீழே வழுக்கிவிடும் எந்நேரத்திலும் படபட வென்று சிறகடித்து மீண்டும் அமரும்பொழுது ஏற்படும் சத்தம், பாழடைந்த தரித்திரம் பிடித்திருக்கும் சத்தமாக சூழ்நிலையோடு ஒன்றித்து போனது.

அரை குறையாக கட்டப்பட்டிருந்த வீட்டின் அறைக் கதவைத் திறந்தபடி விறாந்தையில் அமர்ந்திருந்த அவனுக்கு அந்தகாரத்தில் நடமாடும் ஆபத்தும் பயமும் கண்களுக்குப் புலப்படாவிட்டாலும் மனதுக்கு அது தெரிந்தது.

"இன்னும் வெளியேவா இருக்கிறீர்கள்? வீட்டிற்குள் வந்து கதவை சாத்திக் கொள்ளுங்கள். கடவுளே இதைப் போன்ற ஒரு நாளில் வீட்டுக்கதவைத் திறந்து கொண்டு இப்படி இருப்பது நல்லதா?"

UNIVERSITY OF PERADENIYA
17 - 2 - 1996
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியின் ஈனஸ்வரக் குரல் அவனுக்கு சன்னமாகக் கேட்டது. அவளுடைய சிங்கள உச்சரிப்பில் வாலாயமில்லாத தன்மை இன்னும் இருக்கத்தான் செய்தது.

முழங்காலில் வைத்திருந்த அவனின் புறங்கை மீது கோப்பிக் கொட்டையளவு மழைத் துளி ஒன்று விழுந்தது. சற்று நேரத்தில் அந்த தண்ணீர்த் துளி புடைத்து வளைந்திருந்த நரம்பின் இடையில் வழிந்தது, இன்னும் சிறிது நேரம் சுற்றாடலுக்கு செவி கொடுத்து நின்ற அவன். திடீரென்று எழுந்து பாதிக் கதவை மூடி தாழ்ப்பாள் போட்டான். முன் பின் இல்லாத குரூரமான சக்திகள் அந்த இரவில் சூடான எண்ணெய்த் தாழியில் கொதித்துக் குமிழியிட்டுக் கொண்டு விளிம்பைத் தாண்டிப் போவதற்கு எட்டுவதுபோல் அவன் மனதுக்கு தெரிந்தது. எமனுடைய மோப்பத்தைப் பிடித்து வரும் கோரமான சக்திகளை இந்தக் கதவுத்தாழ்ப்பாளினால் தடுத்து நிறுத்த முடியுமா? சாத்தியிருந்த கதவை சிறிது நேரம் அப்பாவியைப் போல் பார்த்துவிட்டு வீட்டுக்குள் காலடி வைத்தான்.

கூப்பிடு தூரத்திலிருக்கும் ஹைலெவல் ரோட்டில் பாரவண்டிகள் வேகமாக ஓடும் சத்தம் அவனுக்குக் கேட்டது. சாயுங்காலம் தொடக்கம் ஊரடங்கு சட்டம் போடப்பட்டிருந்த படியினால் படைவீரர்களை தாங்கிய வாகனங்களைவிட வேறெந்த வாகனங்களும் தெருவீதியில் ஓடும் என நினைத்துக்கூட பார்க்க முடியாது.

காலடி ஓசை படாமல் மெல்லமாக அறைக்குள் வந்த அவன், படுக்கை மீது சென்ற பார்வை அங்கிருந்தவர்களுக்கு சங்கடத்தை உண்டுபண்ணி விடுமோ என்ற பயம் அவனுக்கு ஏற்பட்டது. மூன்று நாள் வயதுள்ள பச்சைப் பெண் குழந்தையை அணைத்துக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது மனைவி படுக்கையில் சாய்ந்து கிடந்தாள். மேசை மீதிருந்த தேங்காய் எண்ணெய் விளக்கின் மெல்லிய பொன்னொளி தாயின், பிள்ளையின் முகங்கள் மீது சாடையாக விழுந்திருந்தது. அங்கு நெருங்கிய அவன் கட்டில் விளிம்பில் உட்கார்ந்து இருவரையும் தன்கையால் அரவணைத்தான். மனைவி கண்களை மூடியிருந்தாலும் அவள் தூங்கவில்லை என்று அவனுக்கு தோன்றியது. பச்சைப் பெண் குழந்தை முகத்தை சுருக்கிக் கொண்டு கைகளை அசைத்து மடக்கியபடி மீண்டும் இதமான நித்திரையில் ஆழ்ந்தது. இதற்கு முன்பு ஒரு நாளும் இல்லாத வகையில் அனுபவித்த அன்பும் இரக்கமும் அவனுடைய இதயத்தில் பொங்கி வழிந்தது. அவர்களை அணைத்த கை அந்தப் பயங்கரமான இரவு முடிந்து விடியும்வரை பெரும் மதிலாக இருக்கும் என அவன் நினைத்தான்.

"லக்ஷ்மி தூக்கமா?" காதில் விழும் அளவுக்கு அவளிடம் கேட்டான்.

"இன்னும் தூக்கம் வரவில்லை"

அது ஏனென்று அவன் திரும்பக் கேள்வி கேட்கவில்லை. அந்த அர்த்தமற்ற கேள்விக்குப் பதிலாக காலாந்த காலமாக உள்ளத்தின் அடித்தளத்தில் எதிரொலித்துக் கொண்டிருக்கும் பெருமூச்சு அவனுடைய வாய் மூலமாக வெளி வந்தது. தாய், தந்தை, உற்றார், உறவினர், நண்பர்கள் கண்ணுக்கும் மனதுக்கும் பழக்கமான ஊர், மண், தோட்டம், மரம், செடி, கொடிகள் அனைத்தையும் விட்டுவிட்டு தன்னை அண்டி வந்த இந்தப் பெண்ணை சாந்தப்படுத்துவதற்கு எதுவுமே சொல்ல முடியாமல் அவன் இதயத்தால் அழுதான். அமைதியற்ற இதயத்துக்கு இன்னொரு இதயத்தை சாந்தப்படுத்த முடியுமா?

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எதையுமே பேசாமல் அவளுடைய முகத்தை கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தான். மூன்று நாட்களுக்கு முன்பு அவள் அனுபவித்த தாங்கமுடியாத வேதனையின் தோற்றங்கள் இன்னும் அவளிடம் தேங்கியிருந்தது. பூமி உண்டாகும்போது ஏற்படும் சம்பவங்களைப்போலத்தான், ஒரு குழந்தையை பெண் பிரசவிக்கும்போதும் மீண்டும் மீண்டும் சம்பங்கள் ஏற்படுகின்றன என்ற நினைவு ஏற்பட்டது. கனவுகளைப் படைக்கின்ற அவனுக்கு தன்னுடைய சிந்தனைகளினூடாக நிரந்தரமாக நடமாடும் அவனுடைய மனோ தத்துவங்கள் வானத்தை முட்டுமளவுக்கு எழும்புவதற்கு அவகாசமிருந்தாலும் அவன் தன்னுடைய தெளிவான மனதினால் அதைப் பிடித்திழுத்து அமுக்கி கீழே இறக்கி விட்டான்.

"தனித்தனியாக இருக்கும்போது எல்லோரும் நல்லவர்கள். ஒன்றுசேர்ந்து விட்டால் யாருமே மிருகங்கள்தான். நல்லது, கெட்டது கிடையாது. கடவுள் புத்தர் இல்லை. கொடுமையிலும் கொடுமையான மிருகங்கள்தான்."

தன்னையும் மனைவியையும், குழந்தையையும் வீட்டுக்குக் கொண்டு வந்துவிட்ட வாடகைக்கார் சாரதியின் வார்த்தைகள் அவன் நினைவுக்கு வந்து விட்டது. டாக்ஸி சாரதிகளிடையே ஒரு அப்பாற்பட்ட, அவர்களுக்குப் பொருத்தமில்லாத, அந்த மனிதன் கருணை மிகுந்தவன். ஊரடங்கு சட்டம் போடுவதற்கு முன்பு சேதுவத்தைக்குப் போக இருந்தாலும் வண்டியை வேகமாக ஓட்டுவதன் மூலமாக குலுங்கி தாய்க்கும், குழந்தைக்கும் ஏதாவது பங்கம் ஏற்பட்டு விடுமோ என்றெண்ணி வேகமாக ஓட்டுவதற்குக் கூட சங்கடப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நகரத்திலேயே நாங்கள் ஊறிப் போனாலும், நாங்களும் கிராமத்திலிருந்து வந்தவர்கள்தான். ஐயா எனக்கும் அம்மா இருந்தார்கள்." வாடகைக்கார் சாரதி தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்தும் முகமாக திரும்பத் திரும்பக் கூறினான்.

"தாய்மார்களுக்கு செய்யப்படும் சாத்து எங்களுக்கு நினைவிருக்கிறது. இலை குழைகளால் குளிப்பாட்டுவார்கள். வேப்பெண்ணெய் தூபம் பிடிப்பார்கள். ரசம் கொடுப்பார்கள். எதைத்தான் செய்ய மாட்டார்கள். ஆமா........... ஆயிரமாயிரம் சாத்துக்கள். இதையெல்லாம் இங்கே எப்படி செய்ய முடியும்? எதற்கும் நீங்கள் வேப்பெண்ணெய் தூபமாவது பிடிக்க வேண்டும். அது பச்சைக் குழந்தைக்கும் நல்லது எவருக்கும் நல்லது" சற்று கழித்து சாரதி மீண்டும் கூறினான்.

இவர்களுடைய வாழ்க்கையில் எதிர்பாராதவிதமாக வந்து சந்தித்த சாரதி யை எப்பொழுதுமே சந்திக்க முடியாது என்ற நிலையில் சாரதி புறப்பட்டுப் போனான். ஆனாலும் அரை மணி நேரத்திற்கும் குறைவாக நெருங்கிவிட்ட அந்த மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் ஒரு அர்த்தத்தையும் தத்துவத்தையும் புகட்டி விட்டானா என்று அவனுக்கு தோன்றியது.

பட்சபாதமில்லாமல் சொடுக்கிவிடும் ஒரு சவுக்கைப்போல் இடி முழங்கியது. பயங்கரமான புலியின் உறுமலாய் வானம் விளங்கியது. இடைக்கிடையே மின்னி முழங்கும் மின்னல்கள் மாணிக்கக்கல்லைத் தீட்டியது போல் நெருப்பைக் கக்கியது. வானம் பிளந்து மழை கொட்டுவதற்கு தயாராக இருந்தபொழுது அவர்கள் வந்தார்கள். பேயரக்கன் பிடித்திருந்த அந்தக் கூட்டத்தில் முப்பது நாற்பது பேர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டும் என அக் கும்பலைப் பார்க்கும்போது அவன் நினைத்தான்.

"ஒய் ஐயா உம்மோடு எமக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. நீ எங்களில் ஒருவன். ஆனால் உம்முடைய மனுஷி எங்களவர் அல்ல வெளியே தள்ளு....."

"ஆமாம் ..... ஆமாம் நாங்கள் கெட்டவர்கள் என்று சொல்ல வேண்டாம்."

"துரிதப்படுத்தும் ஒய் இங்கே காத்துக் கொண்டிருக்க எங்களுக்கு நேரமில்லை. இன்னும் எங்களுக்கு வேலை இருக்கிறது."

"மிருகங்கள் ........ வெறிப் பிடித்த நாய்கள் அவனுடைய இரத்தம் கரை உடைந்து மீறி ஓடும் ஆற்றுப் பெருக்குப்போல் திடீரென உருவானது. பூமியும் தாங்கும் ஒரு அநியாயமா இது? அந்தக் கணத்தில் அவன் மனைவியிடமும் பச்சைக் குழந்தையிடமுமிருந்து எழுந்துக் அடுக்களையின் ஒரு புறத்திலிருந்த கோடாலியை எடுத்துக் கொண்டு எதிரிகளின் முன்னே சென்று அவர்களில் இரண்டு மூன்று பேரை தீர்த்துக் கட்டிவிட்டு தன்னையும் மாய்த்துக் கொள்வதற்குத் தயாரானான்.

இந்த ஜென்மத்தில் முடிவில்லாத போர்க்களத்தில் யுத்தம் நடக்கும் பல வாரங்களில் மரணத்தைக் கண்ட அனுபவத்தினால் அதை விட்டுப் போவதற்கு அந்த நிமிசம் அவன் மனம் இடந்தரவில்லை. ஆனால் அவன் எடுத்து வைத்த அடியை மனைவியின் அவலக் குரல் கேட்பதற்கு முன்பேயே பின் வாங்கினான். சற்று நேரத்தில் தன்னுடைய பச்சை குழந்தையை அணைத்துக் கொண்டு மனைவியையும் கூட்டிக் கொண்டு பின் வழியாக தூறிக்கொண்டிருக்கும் மழையின் இருட்டில் நுழைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடே இந்த நாட்டில் எங்கட பொம்பிளைகள் இல்லையாடா? நீ போய் அந்தப் பொம்பிளையைக் கழுத்தில் கட்டிக் கொண்டாய். ஏண்டா .... ப்பூ" .... அந்தக் கணத்தில் கதவு இரண்டாகப் பிளந்து துண்டு துண்டாக விழும் சத்தம் அவன் செவியில் விழுந்தது.

இருந்திருந்து அவன் வீட்டுக்கு வந்து சிறு சிறு கைவேலைகள் செய்து மனைவியிடம் இரண்டொரு ரூபாய் வாங்கிக் கொள்ளும் ஜேன் அக்காவுடைய குடிசையின் கிடுகு வழியாகத் தெரியும் குப்பி விளக்கின் ஒளி மின்மினிப் பூச்சி மினுங்கும் ஒளியாய்த் தெரிந்தது. ஆனாலும் அலை புரண்டெழுந்துவரும் சிந்தனை சமுத்திரத்தில் கற்பாறைகளுக்கிடையே அப்பாவியாகத் தனித்துப் போயிருக்கும் அவனுக்கு கரையிலிருந்து மின்சாரத் தூணிலிருந்து வரும் அமைதியான ஒளியைப்போல் அது தெரிந்தது.

"கடவுளே இது எங்கள் ஐயாவல்ல. என்னப்பா ஏனிந்த இருட்டிலே?" கதவைத் திறந்த ஜேன் அக்கா ஆச்சரியத்தோடு கேட்டாள். அவன் கையிலிருந்த பச்சைக் குழந்தையையும் அருகிலிருந்த மனைவியையும் சற்று நேரங்கழித்தே கண்டாள்.

"ஐயோ ஆண்டவனே" என்று அவள் தன்னை அறியாமலேயே கேவினாள். ஆயினும் அவள் ஆச்சரியமென்ற குறடின் இடுக்கில் கொஞ்ச நேரமே மாட்டிக் கொண்டிருந்தாள்.

"வீட்டுக்குள் வாருங்கள்கடவுளே வீட்டுக்குள் வாருங்கள். என்ன நீங்கள் பச்சைக் குழந்தையோடு இந்தக் கூதலிலே . . இருட்டிலே . . . அப்படியென்றால் அவர்கள் அங்கேயும் வந்திட்டாங்களா? வெறிப் பிடித்த நாய்கள். குழந்தையை என்னிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாருங்கள். அம்மா அந்த சாக்குக் கட்டிலில் உட்காருங்கள். மழை தூறலில் அகப்பட்டு விட்டீங்க என்ன? சரியான கூடாத நேரம் இருங்க நான் நெருப்புத் தட்டைத் தாரேன்."

குழந்தையை அவன் கையில் கொடுத்த ஜேன் அக்கா பார்த்தும் பாராமலும் கணத்தில் காய்ந்து சருகாயிருந்த தென்னந்தும்பு எரியும் தட்டு ஒன்றை அவன் மனைவியுடைய இரு கால்களுக்குகிடையே வைத்தாள்.

"எங்க மார்ட்டின் பொடியனும் பின்னேரந் தொடக்கம் எந்த திக்கு திசைக்குப் போனானோ தெரியாது அவள்கோப்பி வார்த்துக் கொண்டிருக்கும்போதே சொன்னாள்". அவனென்றால் ஒரு வெறி பிடித்த நாயல்ல. ஆனாலும் வடிசாராயம் வாயில் கொஞ்சம் ஊற்றிக் கொண்டால்.....ஐயாவுடைய முகமேதான் என்று கூறிவிட்டு மறுபடியும் அவன் கையிலிருந்து குழந்தையை தூக்கிக் கொண்டு சாக்குக் கட்டிலில் சாய்ந்திருந்த அவன் மனைவியின் அணைப்புக்குள் வைத்துவிட்டு இரண்டு பேரையும் போர்த்திவிட்ட ஜேன் அக்கா பலாக்காய் வெட்டும் கத்தியை எடுத்துக் கொண்டு கதவருகிலே இருந்த மாம்பலகையால் செய்த பெட்டியின் மீது இருந்தாள்". வழி தவறி இந்தப் பக்கம் வந்தால் பார்ப்போம்."

இந்த பெண்ணை ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்த அவனுக்கு ஆயிரக்கணக்கான தொல்லைகளுக்குள் கட்டப்பட்ட தன் வீடு வெடித்து வெடித்து எரியும் சத்தம் அவனுக்கு காதில் விழவில்லை .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைகளை
மொழிபெயர்த்து
வெளியிட
மனமுவந்து
அனுமதியளித்த
சிறுகதைச் சிற்பிகள்
பற்றி..............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமரத்ன பாலசூரிய



குளியாப்பிட்டியில் *13-01-1943*ம் ஆண்டு பிறந்த சோமரத்ன பால சூரிய தனது ஆரம்பக் கல்வியை குளியாப்பிட்டி மத்திய மகாவித்தி யாலயத்தில் முடித்து விட்டு களனி பல்கலைக்கழகத்தில் சிங்களத்தில் சிறப்புப்பட்டதாரியாகி அதே பல் கலைக்கழத்தில் விரிவுரையாளராக கடமையாற்றுவதற்காக நியமிக்கப் பட்டார்.

*1968*ம் ஆண்டு பிரான்ஸ் கான் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பிரான்ஸ் மொழி வாயிலாக பிரான்ஸிய பண்பாட்டியல் பற்றி பாடத்திட்டமொன்றை மேற்கொண்டார். அதன் பின்னர் சோர்போன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த சோமரத்ன பாலசூரிய கலாநிதி பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

பொது நலவாயநாடுகள் புலமைப் பரிசில் பெற்ற இவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் பண்பாட்டியல் சம்பந்தமாக ஆய்வு நடத்தினார்.

சிறுகதை, நாவல், கவிதைத்துறையில் மட்டுல்ல விமர்சனத் துறையிலும் மிகவும் காத்திரமான பங்களிப்புச் செய்து வருகிறார். இவரால் எழுதப்படும் கட்டுரைகள் சிங்கள இலக்கிய வளர்ச்சிக்கு உரமூட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1986*ம் ஆண்டு இவரால் எழுதப்பட்ட 'வப்மகுள'(உழவர் விழா) என்ற நாவல் சிங்கள நாவல் இலக்கியத்துறையில் புதிய சகாப்தத்தை உருவாக்கியது. 'கரத்தய' (வண்டில்) என்ற சிறுகதைத் தொகுதிக்கு *1991*ம் ஆண்டுக்கான சாகித்திய பரிசு கிடைத்தது. இதே ஆண்டு மக்கள் இலக்கிய விழாவிலும் பரிசு வழங்கப்பட்டது.

இப்பொழுது களனி பல்கலைக்கழகத்தில் சிங்களப்பிரிவில் பேராசிரியராக கடமையாற்றுகிறார்

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் விஜேசூரிய



கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த மினுவாங்கொடை பொரகொடையில் *1959*ம் ஆண்டு ஜனவரி முதலாம் தேதி பிறந்த இவர் நாலந்த மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை முடித்தார். கொழும்பு பல்கலைக்கழத்தில் படித்த இவர் சிங்களத்தில் முதலாம் வகுப்புத் தரத்தில் சித்தியடைந்தார். பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் தத்துவத்தில் முதுமாணி பட்டம் பெற்றார். இவர் சிங்கள இலக்கிய உலகிற்கு பல்வேறு பங்களிப்பைச் செய்துள்ளர். சிறுகதை, நாவல்கள் குறிப்பிடத்தக்கவையாகும். மாணவ மாணவிகளுக்கு அத்தியா வசியமான கல்வி நூல்களையும் வழிகாட்டி நூல்களையும் எழுதியுள்ளாா.

இவர் எழுதிய 'அவிது அந்துர' (அறியாமை இருள்) என்ற நாவலுக்கு *1989*ம் ஆண்டுக்கான டி.ஆர். விஜேவர்த்தன பரிசு வழங்கப்பட்டது. இவர் இலக்கியத்துறையில் பல பரிசோதனைகளைச் செய்துள்ளார். வெளிநாட்டுச் சிறுகதைகளை சிங்களத்தில் மொழிபெயர்த்து அதற்கு விமர்சனமும் எழுதி சிங்கள இலக்கியத்திற்கு அதை ஒரு வழிகாட்டி நூலாக்கினார். பல்வேறு இலக்கிய அமைப்புக்களுக்கு கௌரவப் பிரமுகராகத் திகழ்கிறார். இலங்கை எழுத்தாளர் சங்கத்தில் செயலாளராகவும் பல்கலைக்கழக கலாகேந்திரத்தில் சிரேஷ்ட பொருளாளராகவும் பல்கலைக்கழக மாணவர் இலக்கியச் சங்கத்தின் பொருளாளராகவும் இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இப்பொழுது கலாநிதி பட்டத்திற்கான ஆய்வுகளை நடத்திவருவதோடு, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிங்களப் பிரிவில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கடமைபுரிகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜயதிலக்க கம்மெல்ல வீர



அங்கொட கொட்டிகாவத்தையைச் சேர்ந்த இவர் நீண்டகாலமாக தொழிற்சங்கவாதியாகவும் இடதுசாரி அரசியல்வாதியாகவும் இருந்தார். இவர் 1985ம் ஆண்டு எழுதிய சிறுகதைத் தொகுதியான 'களுசப்பாத்து' (கறுப்புச் சப்பாத்துகள்) என்ற நூலுக்கு அரசின் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றார். இவர் இலக்கியப் பங்களிப்பாக சிறுகதை, நாவல்கள் எழுதி வருகிறார். 'அட்ட அவுருத்த' (எட்டு ஆண்டுகள்) என்ற நாவல் டி. ஆர் விஜேவர்த்தன பரிசைத்தட்டிக் கொண்டது மட்டுமல்ல ரூபவாஹினியில் 'பிரபாதய' (ஆழம்) என்ற பெயரில் தொலைக்காட்சி நாடகமாக ஒளி பரப்பாகியது

இவரால் 1992ம் ஆண்டு எழுதப்பட்ட 'மாஞ்சு'(கைவிலங்கு) என்ற சிறுகதைத்தொகுதிக்கு சாகித்திய மண்டலப்பரிசும் கிடைத்தது. இவரின் பிரபல நாவலாகிய 'தாத்தலாகே கத்தாவ' (அப்பாக்களின் கதைகள்) இந்நாட்டில் இடது சாரி இயக்கம் எவ்வாறு சிதைந்து போனது என்பதை எடுத்துக் காட்டியது. இந்நாவல் சிங்கள இலக்கிய உலகில் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியது.

இவர் இப்பொழுது சுதந்திர ஜனநாயக அமைப்பான விபவி தலைமையகத்தில் அதன் தலைவராகக் கடமைப்புரிகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயாசேன குணசிங்க



இங்கிரியாவிலுள்ள ஊரகல கிராமத்தில் *13 -06-1936*ம் ஆண்டு பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை ஹேபொட மஹகம ஆகிய பாட சாலைகளில் படித்து உயர்தரக் கல்வியை *1950*ம் ஆண்டு ஹொரண ஸ்ரீ பாலி மகாவித்தி யாலயத்தில் முடித்தார். இங்கு தமது கல்வியை ஆங்கிலம் மூலம் விஞ்ஞானத் துறையில் கற்ற இவர் சிரேஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சை யில் சித்தியடைந்து பேராதனைப் பல் கலைக்கழகத்தில் *1956*ல் கலைப்பட்டத்தாரியானார்.

*1959 -1962* வரை மாத்தறை மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி அத்தொழிலை ராஜினாமாச் செய்து விட்டு லேக்ஹவுஸ் தினமின ஆசிரியர் பீடத்தில் ஓர் எழுத்தாளராகச் சேர்ந்தார். உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாசிரியராகக் கடமையாற்றிய இவர் டெய்லி நியூஸ் பத்திரிகைக்கும் உதவியாசிரியராக இருந்தார்.

நாடக, இலக்கியத்துறை விமர்சகராக இருந்த இவரை சிலுமின பத்திரிகை தமது சிறப்புக்கட்டுரையாளராக நியமித்தது.

*1970*ம் ஆண்டு பொது நலவாய நாடுகள் பத்திரிகை நிறுவனத் தார் வழங்கிய புலமைப்பரிசு பெற்று பிரித்தானிய காட்..ப்



UNIVERSITY OF PERADENIYA
17 - 2 - 1996
LIBRARY

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நகரத்தில் பத்திரிகை அலுவலகத்தில் சிறப்புத்தேர்ச்சி பெற்றார். அங்கிருக்கும்போது லிவர் போஸ்ட், நொதேன் எக்கோ ஆகிய பத்திரிகைகளிலும் கடமையாற்றினார்.

உபாலி பத்திரிகை நிறுவனத்தில் சேர்ந்த இவர் திவயின ஞாயிறு வார இதழ் ஆசிரியராக *1980-1990* வரை கடமையாற்றினார்.

தயாசேன குணசிங்கவினால் எழுதப்பட்ட கவிதைகளும் கதைகளும் சிங்கள இலக்கியத்தில் புரட்சிகரமான மாற்றத்தை உண்டுபண்ணியது.

*1974*ம் ஆண்டு 'ரன் தெட்டி கந்துலு'(பொற்தாளக் கண்ணீர்) சாகித்தியப் பரிசைத் தட்டிக் கொண்டது. *1986* ம் ஆண்டு 'கனல் பாரே நிசாச்சரயெக்' (கனல் வீதியில் இரவு நடமாட்டம்) சிறுகதைத் தொகுதிக்குப் பரிசு கிடைத்தது. *1991*ல் 'கேதுமதி ஹோட்டலயே ராத்திரியக்'( கேதுமதி ஹோட்டலில் ஓர் இரவு) என்ற சிறுகதை நூலுக்கு பரிசு கிடைத்தது.

தற்போது சிவ்தேச சஞ்சிகையின் ஆசிரியராகக் கடமையாற்றி வரும் இவர் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார்.

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996



470307
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
17-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மடுளுகிரியே விஜேரத்ன

முதல் நாள் காவல் காத்துக் கொண்டிருந்த இராணுவவீரர்கள் காணப்படவில்லை. சாதிரிஸின் உள்ளம் சந்தோஷத்தால் பூரித்துப் போயிருந்தது. சொல்லமுடியாத அளவுக்கு ஆனந்தத்தால் ஆட்கொள்ளப்பட்ட அவன், படகில் ஏறி துடுப்பெடுத்து வலையை நோக்கி வலிக்கத் தொடங்கினான். மிதப்பை ஒவ்வொன்றாக வேகமாகச் சேர்த்துக் கொண்டு தண்ணீரிலிருந்து அவன் இழுக்கத் தொடங்கினான்.

# வலை

ISBN 955 - 95389 - 2 - 6

ரூபா 75/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org